# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - OCTOBER 2024
VOL. 22 ISSUE 7 - 36 PAGES - Rs. 21/-

அக்டோபர் 2024



**"என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலைநிறுத்தினேன்"**

(யாத்திராகமம் 9:16)



# புதுச்சேரி ஆசீர்வாதக் கூட்டம்







2024, ஆகஸ்ட் 25-ம் தேதி, புதுச்சேரியிலுள்ள கம்பன் கலையரங்கத்தில், ஆசீர்வாதக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தேவனுடைய மகிமையும் அன்பும் வெளிப்பட்டது. Dr. ஷில்பா தினகரன், கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வாழ்த்தி, சகரியா 4:6 என்ற வசனத்தின் அடிப்படையில் தேவ செய்தி வழங்கினார்கள். தங்கள் வாழ்வில் அற்புதங்களை நடப்பிக்கவும், முடியாத காரியங்களை செய்து முடிக்கவும் தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் மீது நம்பிக்கை வைக்கும்படி வந்திருந்த மக்கள் அனைவரையும் இச்செய்தி ஊக்கப்படுத்தியது. தொடர்ந்து, ஆண்டவர் இயேசுவின் பிரசன்னத்தை கனமாக எண்ணுவதன் அவசியத்தைக் குறித்தும், அவருக்கு முதலிடம் கொடுக்கும்போது மற்ற எல்லா ஆசீர்வாதங்களும் எப்படி பூரணமாக கிடைக்கின்றன என்பதைக் குறித்தும் சகோ. சாமுவேல் தினகரன் செய்தியளித்தார். இக்கூட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். அனைவரும் தேவ பிரசன்னத்தை உணர்ந்தார்கள்.



சகோ. சாமுவேல் தினகரன் நிறைவு பிரார்த்தனை ஏறெடுத்தபோது, தேவ அன்பு பிரவாகித்தது. அநேகர் கண்ணீர் சிந்தினர்; தனிப்பட்டவிதத்தில் தெய்வீக தொடுதலை உணர்ந்தனர். ஆராதனை வேளையில் பாடிய பாடல்களும், வழங்கப்பட்ட தேவ செய்திகளும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையான அசைவாடுதலை உணரச் செய்தன. தேவன் வல்லமையான கிரியைகளை நடப்பித்தார். மக்கள் ஆவியில் புத்துணர்வு அடைந்தவர்களாக, நம்பிக்கை பெற்றவர்களாக திரும்பினர். தேவனுக்கே சகல துதியும் மகிமையும் உண்டாவதாக.











## சென்னை, ஜே.சி. ஹவுஸ் ஜெப கோபுரத்தில் ஞாயிறு ஆசீர்வாதக் கூட்டம்

2024, செப்டம்பர் 8-ம் தேதி ஞாயிறு அன்று சென்னை ஜே.சி.ஹவுஸில் நடைபெற்ற சிறப்பு ஆராதனையில், Dr. பால் தினகரனும் அவரது குடும்பத்தினரும் பங்கேற்றனர். நூற்றுக்கணக்கான மக்கள் இதில் கூடி வந்து தேவனை ஆராதித்தனர். உள்ளமுருக்கும் பாடல்களைப் பாடி ஆராதனை நடத்தப்பட்டது. Dr. பால் தினகரன், தேவன் தமது பிள்ளைகளுக்கு முன்னே சென்று எவ்வாறு அற்புதங்களை நடப்பிக்கிறார் என்ற வல்லமையான தீர்க்கதரிசன செய்தியளித்தார். அவரது செய்தி அநேகருக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் அளித்தது. ஆராதனையின்போது பலர் தேவ ஆவியானவரின் அசைவாடுதலை உணர்ந்தார்கள். கூட்டத்தின் இறுதியில், தேவன் தங்களை எவ்விதம் தொட்டார்; என்ன நன்மையை செய்தார் என்று அநேகர் முன்வந்து சாட்சி கொடுத்தனர்.














# சென்னை அற்புத உபவாச ஜெபம்

அறிக்கை












சென்னை, வானகரம் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில், 2024 செப்டம்பர் 14-ம் தேதி அற்புத உபவாச ஜெபம் நடைபெற்றது. இதில், Dr. பால் தினகரன் குடும்பத்தினரின் ஜெபத்தின் மூலம் தேவனிடமிருந்து அற்புதங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். சகோதரி ஸ்டெல்லா ரமோலாவும், சகோ. டேனியல் டேவிட்சனும் நடத்திய ஆராதனை வேளை உள்ளங்களை உருக்குவதாக இருந்தது. சகோதரி ஸ்டெல்லா தினகரன், கூடி வந்திருந்த அனைவருக்காகவும் ஊக்கமாக ஜெபித்தார்கள். சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், தேவன் தம் ஜனங்கள் வாழ்வில் அற்புதங்களை நடப்பித்து, அவர்களுக்கு நன்மை செய்ய ஆவலாயிருக்கிறார் என்று தேவ செய்தியளித்தார்கள்.

**புற்றுநோயிலிருந்து உடனடி சுகம்**

நான் மார்பில் புற்றுநோயால் வேதனை அனுபவித்து வந்தேன். ஜெப வேளையில் சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன் ஜெபித்தபோது, என் மார்பிலிருந்த கட்டியை தேவன் அகற்றினார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக

- **சகோதரி அன்னம்மாள்**, ஆந்திர பிரதேசம்.

இந்தக் கூட்டத்தின் மூலம் தேவ நாமம் அதிகமாய் மகிமைப்பட்டது. உபவாச ஜெபம் நிறைவடைந்ததும் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. மக்கள் ஆவிக்குரிய உணவுடன் சரீரப் பிரகாரமான உணவையும் பெற்றுக்கொண்டனர்.



மாற்றுத் திறனாளியான திவ்யா கலா என்ற இளம் பெண்ணுக்கு சீஷாவின் சார்பில் மூன்று சக்கர வாகனம் வழங்கப்பட்டது. மூன்றாம் பாலினத்தவர் ஒருவருக்கு உணவு விற்கக்கூடிய தள்ளுவண்டியும், ஒரு விதவை பெண்மணிக்கு இஸ்திரி பெட்டியுடன் அதற்கான தள்ளுவண்டியும், மேலும் நான்கு விதவை பெண்களுக்கு தையல் மிஷின்களும் சீஷாவால் வழங்கப்பட்டன.





**அற்புத உபவாச ஜெபத்தை தாங்கி, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக விளங்குங்கள்**

நான் அற்புத உபவாச ஜெபத்திற்கு ரூ.............../- நன்கொடை வழங்க விரும்புகிறேன்.

**(ஊழியத்திற்கு காணிக்கை வழங்கக்கூடிய எளிய வழிமுறைகளை இந்தப் பத்திரிகையில் 8-ம் பக்கத்தில் காணலாம்)**

## இந்த மாதம்
# அற்புத உபவாச ஜெபம்

2024 அக்டோபர்
**12**
சனிக்கிழமை
நேரம்:
காலை 10 மணி முதல்

தேவ செய்தியும் ஜெபமும்:
**Dr. பால் தினகரன் & குடும்பத்தினர்**
இடம்: இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம் - வானகரம்
ஜே.சி. கார்டன், 96, பூந்தமல்லி நெடுஞ்சாலை, வானகரம், சென்னை 600 095.
தொலைபேசி: 9940600228 / 9940600229




# மகா உயர்ந்த நிலைக்கு எழும்புங்கள்

அன்பானவர்களே,

பூமியின் உயர்ந்த இடங்களில் உங்களை ஏறியிருக்கப்பண்ணுவதற்கு தேவன் விரும்புகிறார் (ஏசாயா 58:14). இந்த மாதத்தில் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று விசுவாசிக்கிறேன். **“என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலைநிறுத்தினேன்”** (யாத்திராகமம் 9:16) என்று கர்த்தர் கூறுகிறார்.

தேவனுடைய திட்டத்தில் உங்களுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. அவரது வல்லமை முழுவதுமாக வெளிப்படுத்தப்படுவதற்கு உங்கள் பங்களிப்பு அவசியமாகும். நீங்கள் எங்கே இருந்தாலும், தமது வல்லமை காண்பிக்கப்படும்படியாகவும், உங்கள் மூலம் பூமியெங்கும் அவருடைய நாமம் அறிவிக்கப் பட்டு மகிமைப்படுத்தப்படும்படியாகவும் உங்களை அவர் உயர்த்துவார். தேவன், தாழ்வான நிலையிலிருந்து மிக உயர்ந்த நிலைக்கு உங்களை உயர்த்துவதால், உங்கள் வாழ்க்கையில் அவருடைய வல்லமை வெளிப்படுத்தப்படுகிறது; உங்கள் மூலமாக அவரது வல்லமை உலகத்திற்கு வெளிப்படுத்தப்படுகிறது.

நீங்கள் இப்போது எந்தவித இக்கட்டான சூழ்நிலையிலிருந்தாலும் தமது வல்லமையினால் உங்களை தூக்கியெடுத்து, ஜெயம்பெற்றவராக நிலைநிறுத்தி, தம்முடைய நாமத்தை



Dr. பால் தினகரன் - *paul@jesuscalls.org*

மகிமைப்படுத்த தேவனால் முடியும். ஆகவே, பயப்படாதிருங்கள். “ஆண்டவரே, நான் இருந்த நிலையிலிருந்து என்னை உயர்த்தி, உம்முடைய வல்லமையை என் மூலம் வெளிப்படுத்துவதற்காக உமக்கு ஸ்தோத்திரம்” என்று கூறுங்கள்.

### சாம்பலிலிருந்து எழும்புதல்

அன்பானவர்களே, முதலாவது தேவன் மிகவும் இக்கட்டான, நம்பிக்கையற்ற, சாம்பலாகிப்போன சூழ்நிலையிலிருந்து உங்களை உயர்த்த விரும்புகிறார். “**அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கி விடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவனைப் பிரபுக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகிறார்**” (சங்கீதம் 113:7,8) என்று வேதம் கூறுகிறது.

அடிமைத்தன பழக்கங்கள், தவறான காரியங்களை தெரிவுசெய்தது, உடல்நல பிரச்சனைகள், பொருளாதார நெருக்கடி அல்லது உறவுகள் முறிந்துபோனதினால் உங்கள் வாழ்க்கை அழிந்துபோனதாக, சாம்பலைப்போலாகிவிட்டதாக நினைக்கிறீர்களா? தொடர்ந்து தோல்வியினால், உங்கள் கனவு, ஆசைகள் மண்ணாகிவிட்டன என்று நினைக்கிறீர்களா? கவலைப்படாதிருங்கள். கர்த்தர், உங்களை சாம்பலிலிருந்து உயர்த்துவார்.

ஆண்டவர் இயேசு மரணத்தின் வழியாக சென்று, பூமியின் தூளுக்குள் அடக்கம்பண்ணப்பட்டார். ஆனாலும், பரிசுத்த ஆவியானவர் அவரை தூளிலிருந்தும், சாவுக்கேதுவான சரீரத்திலிருந்தும் எழுப்பி, ஜீவன் பெறும்படி செய்தார் (ரோமர் 8:11). அதே பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் இருக்கிறார். இப்போது நீங்கள் இருக்கும் நிலையிலிருந்து அவர் உங்களை உயர்த்துவார்.

“**தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார்**” **(1 கொரிந்தியர் 6:14)**

“**கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக்கொண்டு எழுப்பி, உங்களுடனேகூடத் தமக்குமுன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்**” **(2 கொரிந்தியர் 4:14)**

என்று வேதம் கூறுகிறபடி, நீங்கள் அன்றாட வாழ்வில் இயேசுவின் உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவிப்பீர்கள். “**நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்**” (நீதிமொழிகள் 24:16) என்றபடி, நீங்கள் ஆழத்தினுள் விழுந்திருக்கலாம் அல்லது தூளினுள் விழுந்து கிடக்கலாம். ஆனால், இயேசுவை தூளிலிருந்து எழுப்பி, உயிரோடே வரப்பண்ணின பரிசுத்த ஆவியானவர், உங்களையும் எழுப்பி உயிர் கொடுப்பார்.


உங்கள் வாழ்வில் மரணத்தைக் கொண்டு வருகிற பாவம், அடிமைத்தனம், பெலவீனங்கள், கோபம் என, எது உங்களை இயேசுவிடமிருந்து தூரமாக விலக்குகிறதோ அதை ஆண்டவரிடத்தில் ஒப்படைத்துவிட்டு, “ஆண்டவரே, எனக்கு உதவும். என்னை உயரே எழுப்பும்” என்று கேளுங்கள். உங்களை விடுவிப்பதற்கு எல்லா வல்லமையும் உடைய பரிசுத்த ஆவியானவர், இப்போதே உங்களிடம் வந்து, உங்களை தூக்கியெடுப்பார்.

பஞ்சாப் மாநிலம், அமிர்தசரஸை சேர்ந்த திரு. தீபக் மெஸ்ஸி என்பவரின் சாட்சியை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். தீபக், அரசாங்க வேலையில் சேருவதற்கு 5 ஆண்டுகள் கடுமையாக முயற்சித்தார். அவருடைய நண்பர்கள் அநேகருக்கு அரசு வேலை கிடைத்தது. ஆனால் அவருக்கு அரசாங்க வேலை கிடைக்காததால் அவமானமாக உணர்ந்தார்; தன்னம்பிக்கையை இழந்தார். இந்த வேதனையின் மத்தியில், அவருடைய விசுவாசம் சோதிக்கப்பட்ட நிலையில், மனச்சோர்வு அவரைப்

**உங்களுக்கென்று தேவன் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். அவர் உங்களை உயர்த்தி தமது நோக்கத்திற்கேற்ற நிலையில் வைப்பார்**

பிடித்தது. அவர் அரசாங்க வேலைகளுக்கு நுழைவு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றாலும், உடற்தகுதி தேர்வில் தோல்வியுற்றார்.

ஒருநாள் அவர், மலைப்பாங்கான பகுதி வழியாக வீட்டுக்குத் திரும்பும்போது, அவநம்பிக்கை அவரை பிடித்தது. மலையின் மேலிருந்து கீழே குதித்து வாழ்க்கையை முடித்துக்கொள்ள தீர்மானித்தார். அப்போது, “தற்கொலை செய்துகொள்ளாதே, என் மகனே; நான் உனக்கு ஆச்சரியமான திட்டத்தை வைத்திருக்கிறேன்” என்ற இயேசுவின் சத்தத்தை, நம்மை எழுப்பும் உயிர்த்தெழுதலின் சத்தத்தைக் கேட்டார். அப்போது, பெரிய சமாதானம் அவரை நிறைத்தது. அவர் வீட்டுக்குத் திரும்பி, எனக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பினார். அவருக்கு பெரிய வெற்றி




**உங்கள் மூலம் மற்றவர்கள் தங்கள் பாவங்களுக்கு மன்னிப்பை பெறும்படி, இவ்வுலக இன்பங்களையும், பாவங்களையும் பலியாக்கி, பரிசுத்தமாய் வாழும்படி அவர் உங்களை அழைக்கிறார்**

கிடைக்கும்படி நான் ஜெபித்து உடனே பதில் அனுப்பியிருக்கிறேன்.

புது நம்பிக்கை பெற்ற தீபக், மறுபடியும் போட்டித் தேர்வுகளை எழுதி, தேவ கிருபையால் அவர் நான்கு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றார்; அவருக்கு நான்கு அரசாங்க வேலைகள் தயாராக இருந்தன. பெரிய சந்தோஷம் அவரை நிறைத்தது. தற்போது, அவர் பஞ்சாப் அரசாங்கத்தில் வருவாய்த்துறை அதிகாரியாக வேலை பார்க்கிறார்.

என்ன ஆச்சரியம்! தூளிலிருந்து தீபக்கை தேவன், வெற்றிக்கு உயர்த்தினார். அவர் உங்களுக்கும் அப்படியே செய்து, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவார். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக.

### தேவனுடைய நோக்கம் நிறைவேற எழும்புங்கள்

உங்கள் வாழ்க்கைக்கான தமது பெரிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஆண்டவர் உங்களை எழும்பப் பண்ணுவார்.

**"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே"** (எரேமியா 29:11) என்று வேதம் கூறுகிறது.

தேவன் உங்களுக்கென்று ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். அவர் உங்களை உயர்த்தி, தமது நோக்கத்திற்கேற்ற நிலையில் வைப்பார்.

### தேவன் உங்களுக்கென்று வைத்திருக்கும் திட்டங்கள் எவை?

### தீர்க்கதரிசியாக எழும்புங்கள்

ஜனங்கள் மத்தியில் தீர்க்கதரிசியாவதற்கு தேவன் உங்களை எழுப்ப விரும்புகிறார். வெளிப்படுத்தல் 19:10ல் கூறப்பட்டுள்ளபடி, நீங்கள் தேவனுடைய தீர்க்கதரிசியாக, இயேசுவைப் பற்றிய சாட்சியை தரித்திருக்கவேண்டும்.

**"உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்"** (உபா. 18:18) என்று தேவன் கூறுகிறார். ஜனங்களுக்கு தம்முடைய வார்த்தையை கொண்டுசெல்லும் தீர்க்கதரிசியாக உங்களை உருவாக்க தேவன் விரும்புகிறார். ஆகவே, திடன்கொள்ளுங்கள். இப்போது நீங்கள் உங்களை சிறியவராக உணரலாம். ஆனாலும், இழப்பை ஏற்படுத்தக்கூடிய எதிர்மறை வார்த்தைகளை உச்சரிக்காதிருங்கள். மாறாக, தீர்க்கதரிசனம் உரைக்கவும் தமது வார்த்தைகளை பேசவும் உங்களைப் பெலப்படுத்துவதற்காக தமது பரிசுத்த ஆவியினால் நிரப்புவதற்காக தேவனை ஸ்தோத்திரியுங்கள் (அப்போஸ்தலர் 2:17). குறிப்பாக, வாலிபர்கள் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள். உங்களை தேவனுடைய பிள்ளை என்று அறிக்கை செய்யும்போது, நீங்கள் தீர்க்கதரிசனம் உரைப்பீர்கள். தேவன், உங்களை அவரது தீர்க்கதரிசியாக எழுப்பவேண்டுமென்று கேளுங்கள்.

### உண்மையான ஆசாரியனாக எழும்புங்கள்

தேவன், தமது உண்மையான ஆசாரியனாக இருப்பதற்கு உங்களை அழைக்கிறார்.

**"நான் என் உள்ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப்பண்ணி..."** (1 சாமுவேல் 2:35) என்று கர்த்தர் சொல்லுகிறார். இதுவே உங்களுக்கான தேவ பணியாகும்.

ஓர் ஆசாரியனாக, கர்த்தருக்குப் பலிகளை செலுத்தி, ஜனங்களின் பாவங்கள் மன்னிக்கப்படும்படி வேண்டிக்கொள்வதே உங்கள் பணியாகும். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக, இயேசு தம்மைதாமே பலியாக கொடுத்து பிரதான ஆசாரியனானார். இப்போது தேவன் உங்களை தமது ஆசாரியனாக மாற்ற விரும்புகிறார்.

உங்கள் மூலம் மற்றவர்கள் தங்கள் பாவங்களுக்கு மன்னிப்பை பெறும்படி, இவ்வுலக இன்பங்களையும், பாவங்களையும் பலியாக்கி, பரிசுத்தமாய் வாழும்படி இயேசு உங்களை அழைக்கிறார். நீங்கள் யாருடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ, அதை அவரும் மன்னிப்பதாக கூறுகிறார். உங்கள் இருதயத்தில் இருக்கும் பரிசுத்தத்தினா

லும், தேவ அன்பினாலும் நீங்கள் அப்படிப்பட்ட வல்லமையையும் அதிகாரத்தையும் பெற்றிருப்பீர்கள். நீங்கள் கர்த்தருக்கு உண்மையான ஆசாரியனாக இருக்கும்போது, தாம் நிச்சயமாகவே உங்கள் வீட்டைக் கட்டி, உங்களுக்கு திடமான அஸ்திபாரத்தை ஸ்தாபிப்பதாக அவர் வாக்குக்கொடுக்கிறார்.

## தேவ ஊழியனாக எழும்புங்கள்

மெய்யான தேவ ஊழியனாக உங்களை எழுப்புவதில் ஆண்டவர் மகிழ்ச்சியடைகிறார்.

''**நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்பகாரியமாயிருக்கிறது... உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன்**'' **(ஏசாயா 49:6)** என்று தேவன் கூறுகிறார். இருளில் இருக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். ''**நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்**'' **(யோவான் 8:12)** என்று இயேசு கூறுகிறார்.

நீங்கள் வாழ்வில் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும், ஆண்டவருக்கு சமீபமாய் நடந்தால், உங்களுக்குள்ளாக இயேசுவின் ஒளி பிரகாசிக்கத் தொடங்கும். இருளில், திகிலில், அழிவில் இருக்கிறவர்களை நீங்கள் வழிநடத்துவீர்கள். உங்கள் படிப்பு, குடும்பம், பொருளாதாரம் என்று எல்லாவிதங்களிலும் தேவனுடைய ஒளி பிரகாசிக்கும். இருளில் இருக்கும் மற்றவர்களுக்கு உதவும்படி நீங்கள் தேவனுடைய அன்பை வெளிப்படுத்த தொடங்குவீர்கள்.


அன்பானவர்களே, உங்களை உயர்த்துவதற்காகவும், அவருடைய மகிமை உங்களில் விளங்கும்படியும் உங்கள் ஆவியை பிரகாசிக்கப்பண்ண கிறிஸ்துவின் வெளிச்சம் ஆயத்தமாயிருக்கிறது. இதற்காகவே ஆண்டவர் உங்களை தமது பரிசுத்த ஆவியினால் நிரப்புகிறார். பரிசுத்த ஆவியினால் நாம் உலகின் ஒளியாயிருக்கிற கிறிஸ்துவின் சாயலாக மகிமையின் மேல் மகிமையடைகிறோம் (2 கொரி. 3:18).

## ராஜாவாக எழும்புங்கள்

தமது அற்புதங்களை ஜனங்களுக்கு கொண்டு வரும்படி தலைவராகவும், அதிகாரம் கொண்ட ராஜாவாகவும் விளங்குவதற்கு ஆண்டவர் உங்களை தெரிந்துகொண்டிருக்கிறார். அவர், தம் ஜனங்களுக்கென்று தலைவர்களை எழுப்புவார் என்று வேதம் கூறுகிறது (எரேமியா 30:9). அநேகரை கிறிஸ்துவின் இரட்சிப்பை அறிகிற அறிவுக்கு நேராக வழிநடத்தவும், அவரது வல்லமையான நாமத்தில் அற்புதங்களை நடப்பிக்கவும் உங்களை இந்த உலகில் ஒளியாக மாற்றும்படி, இந்த கிருபை உங்கள்மேல் வரும்படி ஜெபிக்கிறேன்.

ஆண்டவர், ''ஜனங்களை என்னை சேவிக்கப் பண்ணும்படி நான் அவனை ராஜாவாக உயர்த்துவேன்'' என்று வாக்குப்பண்ணுகிறார். அவ்விதமாக, தேவன் உங்கள் ஆவிக்குரிய அந்தஸ்தை ராஜாவை போல உயர்த்துவார்; இயேசுவின் நாமத்தில் அற்புதங்கள் நடக்கும்படி கட்டளையிடுவதற்கான வல்லமையைத் தருவார். நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபிக்கும்போது, எதைக் கேட்கிறீர்களோ அதை ஆண்டவர் உறுதிப்படுத்துவார்; அற்புதங்கள் நடக்கும். ''நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்'' (மாற்கு 11:24) என்று வேதம் கூறுகிறது.

''**விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை**




**எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்**'' (மாற்கு 16:17,18) என்று இயேசு கூறுகிறார். இந்த ராஜரீக அதிகாரத்தை நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் அனுபவிக்க முடியும். இந்த அதிகாரத்தினால், நீங்கள் பிசாசுகளை துரத்துவீர்கள்; தீர்க்கதரிசன வார்த்தைகளை பேசுவீர்கள்; வியாதிப்பட்டவர்களை சுகப்படுத்துவீர்கள். இராஜாதி இராஜாவிடமிருந்து வரும் வார்த்தைகளை நீங்கள் பேசுவீர்கள்; மேலே இருந்து உங்களுக்குக் கொடுக்கப்படும் பெரிய அதிகாரத்தினால் நீங்கள் ஜனங்களை விடுவிப்பீர்கள்.

தேவன் இந்த வல்லமையை உங்களுக்கு தந்து, இயேசுவின் நாமத்தில் அற்புதங்களை நடப்பிக்கும்படி உங்களை ராஜாவாக உயர்த்துகிறார். இந்த வாக்குத்தத்தம் உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும்

நிறைவேறும்வண்ணம் உங்களை பரிசுத்த ஆவியினால் நிரப்பும்படி ஆண்டவரிடம் கேளுங்கள்.

### வியாதியிலிருந்து எழும்புங்கள்

நம் தேவன் மனதுருக்கமுள்ளவர். அவர் உங்கள் பெலவீனத்தையும், உங்கள் வீட்டாரின் பெலவீனத்தையும் அகற்ற விரும்புகிறார். வியாதிப்படுக்கையிலிருந்து உங்களை எழுப்ப விரும்புகிறார். இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பிய அதே ஆவியானவர், உங்களையும் எழுப்புவார் என்று வேதம் கூறுகிறது (ரோமர் 8:11).

"**உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்**" (யாக்கோபு 5:14,15) என்று வேதம் கூறுகிறது. வியாதியிலிருந்து நீங்கள் இப்போதே உயிர்த்தெழச்செய்யப்படவேண்டுமென்று ஜெபிக்கிறேன். தேவன், இயேசுவின் தழும்புகளினால் உங்களை வியாதிப்படுக்கையிலிருந்து எழுப்பும்போது நீங்கள் சுகமாவீர்கள்.

பொகாரோவை சேர்ந்த சகோதரர் ஆனம் கூறிய சாட்சியை பகிர்ந்துகொள்கிறேன். 2018-ம் ஆண்டு, திரு. ஆனம் அவர்களின் உடல் எடை இயல்புக்கு மாறாக குறைய ஆரம்பித்தது. அவருடைய மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் வியாதிக்கான அறிகுறிகளை காட்டின. அவருடைய இரத்த வெள்ளையணுக்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது; அது இரத்தப் புற்றுநோயின் அறிகுறியாகும். அக்குடும்பத்தினர் மனமுடைந்து, சிகிச்சை பெறுவதற்காக சிஎம்சி மருத்துவமனைக்கு சென்றனர். கீமோதெரபி சிகிச்சைக்கு நாள் குறிக்கப்பட்டது. ஆனால், அதற்கு முன்னர் அவர்கள், 2018, மே 1-ம் தேதி சென்னையிலுள்ள ஜெப கோபுரத்திற்கு வந்துள்ளனர். அன்று நான் அங்கே வருகிறவர்களுக்கு நேரடியாக ஜெபித்துக்கொண்டிருந்தேன். அவர்கள் ஜெபிக்க வந்தபோது, "ஆண்டவரே, இரத்தப் புற்றுநோய் இருக்கும் சூழ்நிலையை தலைகீழாக மாற்றும். இவரை பூரணமாக குணமாக்கும்" என்று ஜெபித்தேன். அதன்பின்பு, அவர் இயேசுவை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டார்.

பத்து நாட்கள் கழித்து அவர்கள் மருத்துவமனைக்கு சென்று, கீமோதெரபி சிகிச்சைக்கு ஆயத்தமானார். சிகிச்சை ஆரம்பிக்கும் முன், இன்னொரு பரிசோதனை செய்யப்பட்டது. அதில் இரத்த வெள்ளையணுக்களின் எண்ணிக்கை இயல்பு நிலையில் இருந்துள்ளது. மருத்துவர்கள், சிகிச்சையை ரத்து செய்து, அவர் சுகமாக இருக்கிறார் என்று அறிவித்துள்ளனர். ஆறு ஆண்டுகள் கடந்த நிலையில் திரு. ஆனம் இப்போதும் பூரண நலமாக இருக்கிறார்; புற்றுநோய்க்கான அறிகுறியே இல்லை.

ஆண்டவர் உங்களுக்கும் இப்படியே செய்வார். இம்மாதம் முழுவதும் தேவன் தாமே உங்களை ஆவிக்குரியவிதத்திலும் உலகப்பிரகாரமானவிதத்திலும் உங்களை மகா உயரங்களுக்கு உயர்த்தி தமது நாமத்திற்கு மகிமையைச் சேர்ப்பாராக.





**கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்**

**வங்கி மூலம்:**

IndusInd Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **555444333222111**
Bank: **IndusInd Bank, Rajaji Salai Branch, Chennai - 600001.** IFS Code: **INDB0000167**

ICICI Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **000901056144**
Bank: **ICICI Bank Ltd., Nungambakkam Branch, Chennai 600 034.**
IFS Code: **ICIC0000009**

***BANK TRANSFER DETAILS CAN BE INTIMATED: partnercare@jesuscalls.org***

QR Code-ஐ ஸ்கேன் செய்து அனைத்து UPI செயலிகள் மூலமும் தாங்கலாம்.

SCAN TO PAY

Paytm G Pay BHIM

UPI ID ***jesuscalls@indus***

நீங்கள் வங்கி பரிமாற்றம் மற்றும் வங்கிகளின் செயலிகள் (Apps) மூலமாக நன்கொடை அனுப்பினால், தயவுசெய்து அதைக் குறித்த விவரங்களை உடனே **98409 99923** என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் அல்லது வாட்ஸ்அப் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கவும், உங்கள் நன்கொடை வந்து சேர்ந்ததற்கான ஒப்புதலை உங்களுக்கு தெரியப்படுத்தவும் அது உதவும்.

மணியார்டர் (EMO) மற்றும் 'JESUS CALLS' என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் / காசோலை (CTS) எடுத்து, ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 600 028 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

உங்கள் பகுதியிலுள்ள ஜெப கோபுரத்திற்கு நேரில் சென்றும் தாங்கலாம்



# இன்றைய இறை தியானம்

## அக்டோபர் - 2024

**1** **யாத்திராகமம் 9:16 - தேவனுடைய வல்லமை**
**தியானத்திற்கு:** 1 நாளா. 29:11,12; லூக்கா 5:17; 2 கொரி. 13:4

**2** **ஆதியாகமம் 50:20 - தீமைக்கு நன்மை**
**தியானத்திற்கு:** ஆமோஸ் 5:14,15; ரோமர் 12:9,21; 1 தெச. 5:15

**3** **2 சாமுவேல் 22:29 - இருளை வெளிச்சமாக்குகிற கர்த்தர்**
**தியானத்திற்கு:** சங். 18:28; ஏசாயா 9:2; மத். 4:15,16

**4** **எபேசியர் 2:20 - கிறிஸ்துவாகிய மூலைக்கல்**
**தியானத்திற்கு:** லூக்கா 20:17; அப். 4:11; 1 பேதுரு 2:6

**5** **ஏசாயா 51:3 - கர்த்தர் ஆறுதல் செய்கிறவர்**
**தியானத்திற்கு:** சங். 94:19; ஏசாயா 49:13; 2 கொரி. 1:3-5

**6** **சங்கீதம் 23:3 - ஆத்துமாவை தேற்றும் தேவன்**
**தியானத்திற்கு:** ஏசாயா 12:1; எரே. 31:13; 2 தெச. 2:17

**7** **சங்கீதம் 54:4 - கர்த்தர் உங்கள் சகாயர்**
**தியானத்திற்கு:** சங். 27:9; 54:4; எரே. 15:11; எபி. 13:6

**8** **யாத்திராகமம் 14:14 - கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்**
**தியானத்திற்கு:** உபா. 3:22; யோசுவா 23:3,10; நெகே. 4:20

**9** **கொலோசெயர் 2:7 - விசுவாசத்தில் உறுதி**
**தியானத்திற்கு:** அப். 16:5; ரோமர் 4:21; கொலோ. 1:22

**10** **2 சாமுவேல் 22:33 - தேவன் வழியைச் செவ்வைப்படுத்துவார்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 12:23; சங். 18:32; ஏசா. 45:2,13

**11** **நீதிமொழிகள் 14:26 - கர்த்தருக்கு பயப்படுங்கள்**
**தியானத்திற்கு:** ஆதி. 22:11,12; சங். 128:1-4; நீதி. 28:14

**12** **சகரியா 2:10 - கர்த்தர் நம்மில் வாசம்பண்ணுவார்**
**தியானத்திற்கு:** யாத். 29:45,46; 1 இராஜா. 6:13; 2 கொரி. 6:16

**13** **யோவான் 14:18 - திக்கற்றவர்களை கைவிடாத தேவன்**
**தியானத்திற்கு:** சங். 68:5; எரேமியா 49:11; ஓசியா 14:3

**14** **மத்தேயு 17:20 - விசுவாசம்**
**தியானத்திற்கு:** ஆதி. 15:1-6; மாற்கு 9:17-27; யோவான் 5:24

**15** **மத்தேயு 9:22 - விசுவாசத்தினால் இரட்சிப்பு**
**தியானத்திற்கு:** அப். 14:8-10; 16:31; ரோமர் 10:9; எபே. 2:8

**16** **யோவான் 6:35 - ஜீவ அப்பம்**
**தியானத்திற்கு:** மத். 26:26-28; லூக்கா 22:19; யோவான் 6:51

**17** **சங்கீதம் 61:2 - கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்**
**தியானத்திற்கு:** நெகே. 9:27; சங். 50:15; மத். 20:29-34

**18** **சங்கீதம் 16:8 - நீங்கள் அசைக்கப்படுவதில்லை**
**தியானத்திற்கு:** சங். 62:2,6; நீதி. 10:30; லூக்கா 6:47,48

**19** **ரோமர் 6:14 - பாவம் உங்களை மேற்கொள்ளாது**
**தியானத்திற்கு:** ஆதி. 39:7-9; ரோமர் 6:7; எபி. 12:1

**20** **ஏசாயா 41:13 - கர்த்தர் நமக்கு துணை நிற்கிறார்**
**தியானத்திற்கு:** ஆதி. 49:25; ஏசாயா 41:14; 2 தீமோ. 4:17

**21** **சங்கீதம் 23:4 - தேவன் உங்களோடுகூட இருப்பார்**
**தியானத்திற்கு:** உபா. 31:8; யோசுவா 3:7; நியா. 6:13-16

**22** **உபாகமம் 20:4 - கர்த்தர் நம் இரட்சகர்**
**தியானத்திற்கு:** சங். 18:2; ஓசியா 13:4; ரோமர் 10:9,10

**23** **யாத்திராகமம் 15:2 - கர்த்தர் நம் பெலனும் கீதமுமானவர்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 118:14; ஏசாயா 12:2

**24** **நீதிமொழிகள் 12:7 - நீதிமானின் வீடு**
**தியானத்திற்கு:** உபா. 28:12; 1 நாளா. 17:27; நீதி. 15:6

**25** **சங்கீதம் 63:3 - கிருபை நல்லது**
**தியானத்திற்கு:** சங். 103:11; எரே. 3:12; யாக். 4:6

**26** **1 கொரிந்தியர் 12:27 - கிறிஸ்துவின் சரீரம்**
**தியானத்திற்கு:** ரோமர் 12:5; 1 கொரி. 10:16; கொலோ. 1:24

**27** **எஸ்றா 8:22 - தேவனுடைய கரம்**
**தியானத்திற்கு:** நெகே. 2:18; சங். 119:173; அப். 11:21

**28** **1 யோவான் 5:4 - ஜெயம் கொடுக்கும் தேவன்**
**தியானத்திற்கு:** நீதி. 21:31; 1 கொரி. 15:57; 2 கொரி. 2:14

**29** **சங்கீதம் 5:12 - கர்த்தர் நீதிமானை ஆசீர்வதிக்கிறார்**
**தியானத்திற்கு:** சங். 72:7; நீதி. 3:33; 10:6; ஏசாயா 3:10

**30** **1 யோவான் 4:4 - தேவன் பெரியவர்**
**தியானத்திற்கு:** யாத். 18:11; 2 சாமு. 7:22; எரே. 10:6

**31** **சங்கீதம் 9:10 - கர்த்தரைத் தேடுங்கள்**
**தியானத்திற்கு:** ஏசாயா 55:6; ஆமோஸ் 5:4; மத். 7:8


இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்



இணையதளம் : www.jesuscalls.org
ஃபேஸ்புக்: Jesus Calls Tamil
யூடியூப்: JesusCalls சப்ஸ்கிரைப் செய்திடுங்கள்
ஃபேமிலி சேனல் மொபைல் செயலி
ஃபேமிலி சேனல்: இணையதளத்தில் www.familychannel.org



# அறிமுகம் இம்மானுவேல் டிஜிட்டம் திட்டம்

## டிஜிட்டல் ஊழியத்தின் புதிய யுகம்

இக்காலத்தில் டிஜிட்டல் முறையின் வாயிலாக கோடிக்கணக்கானோர் இணைக்கப்படுகிறபடியினால், டிஜிட்டல் முறை ஊழியத்திற்கான வாய்ப்புகள் பெருகியுள்ளன. கிடைக்கிற எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தி, கிறிஸ்துவின் செய்தியை பரப்புவதற்கும், தேவையிலுள்ளோருக்கு ஆறுதல் அளிப்பதற்கும் இயேசு அழைக்கிறார் ஊழியம் நம்பிக்கையுடன் முயற்சி செய்கிறது. தனிப்பட்டமுறையில் தொடர்புகொள்ள உதவும் செயலி (App), இணையதளம் மற்றும் மேம்பட்ட பங்காளர் தொடர்பு சேவை அடங்கிய எலக்ட்ரானிக் தளத்தின் வாயிலாக ஆண்டவருடைய அன்பையும், மனதுருக்கத்தையும் உங்களுக்கு இன்னும் சமீபமாக கொண்டுவர தைரியமாக இம்முயற்சியில் ஈடுபடுகிறோம்.

### புதிய மென்பொருள்: தனிப்பட்டமுறையிலான உங்கள் ஆவிக்குரிய துணைவன்

**ஜெப விண்ணப்பங்களுக்கு உடனடி பதில்:** உங்கள் ஜெப விண்ணப்பங்களுக்கு Dr. பால் தினகரன் குடும்பத்தினர் மற்றும் எங்கள் ஜெபக்குழுவினர் உடனடியாக அனுப்பும் பதில்களைப் பெறலாம். நாங்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பதையும், நாம் நெருங்கிய தொடர்பில் இருப்பதையும் இந்த வசதி உறுதி செய்யும்.

**தேவைக்கேற்றவண்ணம் ஆவிக்குரிய போதனைகள்:** உங்கள் தனிப்பட்ட ஜெப தேவைகளுக்கு பொருத்தமான போதனைகள், செய்திகள் மற்றும் பிரார்த்தனைகளை பயன்படுத்தும் வசதி.

**அவசர ஜெப உதவி:** மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலை, படுத்த படுக்கையாதல், அதிகமான மனச்சோர்வு போன்ற தருணங்களில் உங்களுக்கும் உங்களுக்கு அன்பானோருக்கும் அவசர ஜெப உதவி தேவைப்படும்போது இந்த புதிய வசதியின் மூலம் உங்களுக்கு அருகில் இருக்கும் ஜெப கோபுரம் அல்லது இயேசு அழைக்கிறார் ஸ்தானாபதியுடன் நீங்கள் தொடர்புகொள்ள முடியும். அதுபோன்ற இக்கட்டான தருணங்களில் அர்ப்பணிப்புள்ள எங்கள் குழுவினர் உங்களை வீட்டில் அல்லது மருத்துவமனையில் சந்தித்து, ஜெபித்து, ஆறுதல்படுத்தி, ஆதரவாய் விளங்குவார்கள்.

**விசேஷித்த அழைப்பு:** ஜெப கோபுரத்தில் நடைபெறும் தம்பதியர் ஆசீர்வாதக் கூட்டங்கள், சிறப்பு சுகமளிக்கும் கூட்டங்கள், வணிக ஆசீர்வாதக் கூட்டங்கள், அபிஷேகக் கூட்டங்கள் மற்றும் ஆவிக்குரிய பயிற்சிகள் நடைபெறுகின்றன. உங்கள் தேவைக்கேற்ற கூட்டங்களுக்கு தனிப்பட்டவிதத்தில் அழைப்பு அனுப்பப்படும் வசதி.

**எங்கள் குழுவினரின் மேம்பட்ட சேவை:** இந்த மென்பொருள், தினசரி ஊழியப்பணிகள் குறித்து தெளிவான வழிகாட்டுதல் வழங்கி, எங்கள் சேவைகள் மிக உயர்ந்த தரத்தில் அமைவதற்கு உதவும்; எங்கள் குழுவினர் அனுதினமும் ஜெபத்தோடும் அர்ப்பணிப்போடும் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவார்கள்.

### இயேசு அழைக்கிறார் புதிய இணையதளம்: ஆவிக்குரிய வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த தளம்

**நிறைந்த ஆவிக்குரிய போஜனம்:** வாழ்க்கைக் குறித்த கேள்விகளுக்கு ஏற்றவையும் ஊக்கப்படுத்தக்கூடியவையும், வேத வசனங்களின் அடிப்படையிலுமான பதில்களை இணைய பக்கம் மற்றும் வீடியோக்கள் உள்ளிட்ட பல வழிகளில் உருவாக்கி வருகிறோம். எவ்வித இடையூறும் இல்லாமல் பயன்படுத்தப்படும்படி வடிவமைக்கிறோம்.

**எளிதாக பயன்படுத்தலாம்:** எளிதாக ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, ஆர்வமாக பயன்படுத்தும்படி இணையதளம் புதிதாக வடிவமைக்கப்படுகிறது.

**பல மொழி சேவை:** நாங்கள் வழங்கும் தினசரி வாக்குத்தத்தங்களும் முகப்பு பக்கமும் ஒவ்வொருவரும் தங்கள் தாய் மொழியில் பயன்படுத்தும்படி, தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, ஹிந்தி மற்றும் மலையாளம் ஆகிய ஐந்து மொழிகளில் உள்ளது.



**ஜெப கோபுரத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் ஈடுபடுங்கள்:** உங்கள் பகுதியில் அமைந்துள்ள ஜெப கோபுரத்தில் நடைபெறும் அனைத்து செயல்பாடுகளையும் பார்த்து, அவற்றில் பங்குபெற்று, ஆவிக்குரிய ரீதியில் வளரலாம்.

**ஊழிய சேவைகள் மற்றும் வெளியீடுகளை எளிதாக பயன்படுத்தலாம்:** இணைய வழியில் எளிதாக ஊழிய சேவைகள் குறித்து கோரிக்கை அனுப்பி, விளக்கமோ, உதவியோ உடனடியாக பெற்றுக்கொள்ளலாம்.

**உடனுக்குடன் தெரிந்துகொள்ளலாம்:** நடைபெறும் கூட்டங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வேலைவாய்ப்பு உள்ளிட்டவற்றை குறித்து உடனுக்குடன் தெரிந்துகொண்டு, எப்போதும் ஊழியத்துடன் இணைந்திருக்கலாம்.

## மேம்படுத்தப்பட்ட இயேசு அழைக்கிறார் செயலி (App): இணைந்திருங்கள்; வளர்ந்திடுங்கள்; எப்போதும், எங்கிருந்தாலும் ஊக்கம் பெறுங்கள்

**தனிப்பட்ட கணக்குகள் & குடும்ப இணைப்புகள்:** உங்களுக்கென தனி கணக்கினை தொடங்கி, உங்கள் பங்காளர் விவரங்களை காணலாம்; உங்கள் குடும்பத்தினரோடு இணைந்து, ஆண்டவருக்குள் குடும்பமாக வளரலாம்.

**அனைத்து வயதினருக்கும் ஏற்ற செய்திகள்:** அனைவருடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் ஏற்ற வண்ணம் வெவ்வேறு வயதினருக்கான Dr. பால் தினகரன் குடும்பத்தினரின் வீடியோக்கள், இணைய பக்கங்கள் மற்றும் பாடல்களை பயன்படுத்தலாம்.

**இருவழி தொடர்பு:** உங்கள் ஜெப விண்ணப்பங்கள், குறைகள் மற்றும் தகவல் விவரங்களை இணையவழியில் பகிர்ந்துகொண்டு, செயலில் தனிப்பட்ட முறையிலான பதில்களை பெறலாம்.

**Dr. பால் தினகரன் குடும்பத்தினருடன் நேரலை:** Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் நடத்தும் விசேஷித்த நேரடி தொடர்பு வேளைகளில் பங்குபெறலாம்.

**ஊழிய தொடர்பின் முழு விவரம்:** இயேசு அழைக்கிறார் ஊழியத்துடன் நீங்கள் தொடர்பு கொண்டுள்ள விவரங்களை அறிந்துகொள்ளலாம். ஊழியத்தோடு தொடர்புகொள்ளவும் ஈடுபடவும் இது எளிதாக உதவும்.

**நம் தரிசனம்:** ஆவிக்குரிய அனைத்து தேவைகளையும் சந்திக்கக்கூடிய ஒரு தளம்.

இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம், ஏற்கனவே இருப்பதை மேம்படுத்துவது அல்ல. இது, எல்லா தரப்பு மக்களுக்கும் சேவை செய்யும்படி ஒரே தளத்தில் நம் டிஜிட்டல் ஊழிய சேவைகளை ஒருங்கிணைக்கும் விசேஷித்த பணியாகும். இந்த நவீன வசதிகளை பயன்படுத்தி நீங்கள் எந்த நேரமும், எங்கிருந்தும் எங்களோடு இணைக்கப்படலாம்; தேவனுடனான உங்கள் உறவு ஆழமும் அர்த்தமும் கொண்டதாக மாறும்.

## இந்த தெய்வீக பணியை தாங்கும்படி எங்களோடு கரம் கோர்த்திடுங்கள்

தேவனுக்குச் சித்தமானால், வாழ்க்கையை மறுரூபமாக்கும் இத்திட்டத்தை 2025 ஆகஸ்ட் மாதம் அறிமுகம் செய்ய இருக்கிறோம். இந்த திட்டத்தை செயல்படுத்த உங்கள் ஜெபமும் பொருளாதார உதவியும் அவசியம். இந்தத் திட்டத்தை செயல்படுத்த ரூ.5 கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதற்காக அர்ப்பணிப்புடன்கூடிய தொழில்நுட்ப வல்லுநர் குழுவினர் ஓய்வின்றி உழைத்து வருகிறார்கள்.

இந்த பாக்கியத்தில் நீங்களும் பங்கு பெறுங்கள்; உங்கள் நன்கொடை நன்மையான மாற்றத்தை ஏற்படுத்தும். இந்த தெய்வீக பணியில் பங்காளராகும்படி அன்புடன் அழைக்கிறோம் (தெரிவு செய்யுங்கள்)

☐ ரூ.1,00,000/- ☐ ரூ.50,000/- ☐ ரூ.25,000/-

☐ ரூ..................... (ஆண்டவரால் வழிநடத்தப்படுகிறபடி எந்த தொகையும்)

பெரிய தொகையோ, சிறிய தொகையோ நீங்கள் கொடுக்கும் எல்லா காணிக்கையும் தேவையின் மத்தியில் வாழும் கோடிக்கணக்கான ஆத்துமாக்களுக்கு தேவ அன்பையும் ஆறுதலையும் கொண்டுசெல்ல உதவும் (காணிக்கை அனுப்பும்போது 'இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம்' என்று குறிப்பிட மறவாதிருங்கள்)

கீழ்க்காணும் ஏதேனும் ஒரு வழியில் காணிக்கை கொடுக்கலாம்

* முகவரி: ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை 600 028. * இணையதளம்: www.jesuscalls.org

* ஜெப கோபுரம்: உங்கள் பகுதியில் அமைந்துள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்கு சென்று கொடுக்கலாம்.

* பங்காளர் சேவை: தொலைபேசி எண் 044 – 23456677 (காலை 8 முதல் இரவு 8 மணி வரை – இந்திய நேரம்).

காணிக்கைகளை எளிதாக அனுப்பக்கூடிய வழிகளை இந்த இதழின் 8ம் பக்கத்தில் காணலாம் (QR Codeஐ ஸ்கேன் செய்தும் இப்போதே நன்கொடை வழங்கலாம்)

நாம் இணைந்து தேவனுடைய அன்பை, ஆறுதலை, நம்பிக்கையை இந்தியா மற்றும் உலகின் எல்லா மூலைகளுக்கும் பரப்புவோம். இந்த முயற்சியில் எங்களுடன் துணை நிற்கும் உங்களை தேவன் தாமே அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக.



அன்பானவர்களே,

**“அவர்கள் தங்களுக்கும், தங்கள் பின்னடியாருக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும்படிக்கு, நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிட்டு” (எரேமியா 32:39)**

என்பதே இம்மாதத்திற்கான வாக்குத்தத்தமாகும்.

# பக்தியுள்ள குடும்பத்தை உருவாக்குதல்

இந்த வசனத்தில் ஆண்டவர் வாக்குக் கொடுத்துள்ளபடி, நாம் எப்போதும் அவரை கனம்பண்ணவும், நமக்கும், நமக்குப் பின் நம் பிள்ளைகளுக்கும் எல்லாம் நன்றாய் நடக்கும்படி, நமக்கு சுத்தமானதும், கவனிக்கிறதுமான இருதயத்தையும் ஒரு நோக்கத்தையும் அருளிச் செய்வார்.

தேவனுடனான நம் ஐக்கியத்தில் மட்டுமல்ல, கணவன் மனைவி உள்பட நம் உறவினருடன் நம்முடைய சிந்தனையும் செயல்களும் இணைந்திருப்பதும், வெளிப்படையாக இருப்பதும் அவசியம். பக்தியுள்ள குடும்பத்தை உருவாக்க இந்த ஒற்றுமையும் ஒரே மனமும் தம்பதியருக்கு பெரிதும் உதவும்.

ஜனங்கள் ஒருவருக்கொருவர் நெருங்கியவர்களாக இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறதுபோல, திருமண வாழ்க்கையிலும் ஐக்கியமாய் இருப்பது மெய்யாகவே அவசியம். ஆணும் பெண்ணும் திருமணத்தில் இணையும்போது அவர்கள் ஒன்றாகிறார்கள் (ஆதி. 2:24). இது சரீரப்பிரகாரமாக இணைவதை மட்டுமல்ல, உணர்விலும், ஆவிக்குரிய விதத்திலும், அறிவுப்பூர்வமாகவும் இணைவதையும் குறிக்கிறது. ஒரு கணவனும் மனைவியும் தங்கள் இலக்குகள், நற்குணங்கள் மற்றும் நடத்தையில் இணைந்து செயல்படும்போது, அவர்கள் தேவனை கனப்படுத்தும் வழியில் பிள்ளைகளை வளர்க்க உறுதியான அஸ்திபாரத்தைப் போடுகிறார்கள்.

**“மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்”** (எபேசியர் 4:2,3) என்று வேதம் கூறுகிறது. இந்தத் தகுதிகள், தேவனுடைய வழிகளில் நடக்கும் குடும்பத்திற்கு மிகவும் முக்கியமான ஆரோக்கியமான நல்ல உறவை காப்பதற்கு உதவும்.

பெற்றோர் தங்கள் குடும்பத்தைக் குறித்து ஒரே தரிசனத்தை பகிர்ந்துகொள்ளும்போது, குழந்தையை வளர்ப்பதிலும், முடிவுகளை எடுப்பதிலும், ஒட்டுமொத்தமாக குடும்ப வாழ்விலும் அது நல்ல

Email: evangeline@jesuscalls.org
திருமதி இவாஞ்சலின் பால் தினகரன்

## பக்தியுள்ள குடும்பத்தை கட்டியெழுப்ப தம்பதியரிடையே ஐக்கியமும் ஒருமனமும் காணப்படவேண்டும்

மாற்றத்தை உண்டுபண்ணும். "உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்" (நீதிமொழிகள் 16:3) என்று வேதம் கூறுகிறது. ஒரு தம்பதியரின் எண்ணங்கள் தேவனுடைய விருப்பத்திற்கு ஏற்றாற்போல் இருப்பது, பிள்ளைகளை கிறிஸ்தவ நற்குணங்களோடு வளர்ப்பதற்கு உதவும்.

உதாரணத்திற்கு, பெற்றோர் தங்கள் பிள்ளைகள் வேதத்தை நேசிக்க வேண்டும் என்று விரும்பினால், முதலில் அவர்கள் இருவரும் இணைந்து, வேதத்தை வாசித்து, விசுவாசத்தைக் குறித்து பேசி, ஆலய செயல்பாடுகளில் ஒழுங்காக ஈடுபடுவார்கள். இவற்றை தவறாமல் செய்தால், பிள்ளைகள் இந்த நல்ல பழக்கங்களைக் கற்றுக்கொண்டு, நல்ல ஆவிக்குரிய சூழலில் வளருவார்கள்.

இவ்வாறு ஒரே நோக்கத்தோடு, இணைந்து செயல்பட்டு, ஸ்திரமும் அன்பும் கொண்ட குடும்பத்தை கட்டியெழுப்பியது குறித்து ஒரு குடும்பத்தை உதாரணமாக காட்ட விரும்புகிறேன். ஜாண் - லைசா ஜாண் தம்பதியருக்கு திருமணமாகி 20 ஆண்டுகள் கடந்துள்ளன. பிள்ளைகளை வளர்க்க பல சவால்களை சந்தித்தனர். இருவருக்குமே அலுவலக வேலைப்பளு இருந்தது. பிள்ளைகளை வளர்ப்பது குறித்து வெவ்வேறு கருத்துக்கள் இருந்தன. இது சிலவேளைகளில் பிள்ளைகளுக்கும் முரண்பாடாக, குழப்பமாக அமைந்தது.

தாங்கள் இணைந்து செயல்பட வேண்டியதின் அவசியத்தை உணர்ந்த ஜாணும் லைசாவும், பிள்ளைகளை வளர்ப்பது குறித்த தங்கள் இருவரின் எண்ணங்களையும் நடைமுறைகளையும் ஒருமித்த கருத்தாய் மாற்றுவதற்கு தீர்மானித்தனர். தங்கள் பிள்ளைகளில் வளர்க்கவேண்டிய நற்பண்புகளைக் குறித்தும், தாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் எவ்வாறு உதவுவது என்பது குறித்தும் இருவரும் மனம்விட்டு பேசினர். தங்கள் பிள்ளைகளை கிறிஸ்தவ விசுவாசத்தின் உறுதியான அஸ்திபாரம் கொண்டவர்களாக வளர்க்க இருவரும் விரும்பினர். ஆகவே, ஆலயத்திற்கு தவறாமல் செல்லவும், ஒன்றாய் இணைந்து ஜெபிக்கவும், பிள்ளைகளுக்கு வேத வசனத்தின் அடிப்படையில் தங்கள் நம்பிக்கைகளை போதிக்கவும் முடிவு செய்தனர்.

முக்கியமாக, தினமும் மாலை வேளையில் குடும்ப தியானம் செய்ய ஆரம்பித்தனர். இது, அவர்கள் குடும்ப வாழ்வில், போதிக்கவும், கருத்து பரிமாறவும், ஒருவருக்கொருவர் இடையேயான இணைப்புக்கும் ஏற்றதாக அமைந்தது. பிள்ளைகளின் ஒழுக்கத்தைக் குறித்து இருவரும் தங்கள் கருத்தை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு, அவற்றின் அடிப்படையில் அவர்களை வழிநடத்தினார்கள்.

ஜாணும் லைசாவும் ஐக்கியத்தையும் ஒரே மனதையும் காத்துக்கொள்வதற்காக செய்த முயற்சிகள் பலன் அளித்தன. பிள்ளைகள் தங்கள் விசுவாசத்தை தெளிவாக புரிந்துகொண்டு, தேவனுடைய கற்பனைகளுக்கேற்ப வாழ்வதன் முக்கியத்துவத்தை அறிந்தவர்களாக வளர்ந்தனர். ஒரே மனம் கொண்டவர்களாக இல்லறத்தை நடத்துவதிலும், பிள்ளைகளை வளர்ப்பதிலுமுள்ள அவர்களின் அர்ப்பணிப்பு, அவர்கள் குடும்பத்துக்கு திடமான ஆவிக்குரிய அஸ்திபாரத்தை அளித்தது.

அன்பானவர்களே, திருமண வாழ்வை உறுதியாக, ஒருமனம் கொண்டதாக அமைத்துக்கொள்வது எளிதல்ல. சிலவேளைகளில், முரண்பாடு ஏற்படலாம். ஆனால், அவற்றை சீர்ப்படுத்துவது முக்கியம். ஒருமனமாய் இருப்பதற்கு, கிறிஸ்து இயேசு செய்ததுபோல், தேவனுடைய உதவியை நாடவேண்டும் (ரோமர் 15:5). இல்லற வாழ்வில் ஆரோக்கியத்தையும், குடும்பங்களில் ஒருமனதையும் காத்துக்கொள்வதற்கு நல்ல கருத்து பரிமாற்றம், ஒருவர்பேரில் ஒருவருக்கு மரியாதை மற்றும் சமரசமாகுதல் ஆகியவை மிகவும் முக்கியம். ஆவிக்குரிய தொடர்பு உறுதியாக இருக்கும்போது, தம்பதியரிடையே ஒருவருக்கொருவர் இருக்கும் உறவும் பெலப்படும் என்பதால், உங்கள் உறவில் தேவனுக்கு முதலிடம் கொடுக்க மறவாதிருங்கள்.

குடும்பங்கள் ஒரே மனமாய், ஒரே இலக்கு மற்றும் கருத்துக்களை கொண்டிருப்பது முக்கியம் (எரேமியா 32:39). பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்ற சூழ்நிலையை இருவரும் இணைந்து உருவாக்கவேண்டும். பிள்ளைகளை வளர்ப்பது குறித்து தம்பதியர் ஒரே தரிசனத்தை பகிர்ந்துகொண்டு, ஒருவருக்கொருவர் உதவி செய்யும்போது, விசுவாசம், குண நலன்களில் ஸ்திரமான அஸ்திபாரத்தை அமைத்துக் கொடுக்க முடியும்.

ஐக்கியமும், ஒருமனமும் நல்ல விஷயத்தை செய்ய உதவும் என்பதற்கு ஜாண் - லைசா குடும்பம் சிறந்த மாதிரியாக விளங்குகிறது. பிள்ளைகளை வளர்ப்பது குறித்து அவர்கள் தங்கள் கருத்தையும் விசுவாசத்தையும் பகிர்ந்துகொண்டது, அவர்கள் திருமண உறவை பெலப்படுத்தியதுடன், அவர்கள் பிள்ளைகள் ஆவிக்குரிய விதத்தில் ஸ்திரமாக வளரவும் காரணமாய் அமைந்தது. இல்லற வாழ்வில் தம்பதியர் இணைந்து செயல்படும்போது, தேவன், தம்மை கனப்படுத்தும் வகையில் வாழ்வதற்கு, தங்களை வழிநடத்தி, தாங்கள் எடுக்கும் முயற்சிகளை ஆசீர்வதிப்பார் என்று நம்ப முடியும்.

தேவன் தாமே, தம்மை கனப்படுத்துகிற குடும்பத்தை கட்டியெழுப்பும் கிருபையை உங்களுக்கும் உங்களுக்கு அருளிச்செய்வாராக.

# குடும்ப ஆசீர்வாதத் திட்டத்தில் சேருங்கள்

**"கர்த்தர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுவார்" (சங்கீதம் 115:14)**



படைப்பின் முழு நிறைவையும் வெளிப் படுத்துவது தேவனுடைய தெய்வீக அன்பை யும் ஒருமனதையும் காட்டும் குடும்பமே ஆகும். படைப்பில் தேவனுடைய முதல் திட்டமான குடும்பத்தை, அவர் அருளிய புனிதமான ஈவாக, அவரது மகிமையை வெளிப்படுத்துவதாக, அவரது ராஜ்யத்தை பூமியில் கொண்டு வருவதாக நாம் காண்கிறோம். தெய்வீக அமைப்பான, தேவனுடைய அன்பு பெருக்கெடுக்கிற, அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற, குடும்ப உறவை தாங்கி, அதில் மகிழ்ந்திருப்பது முக்கியம்.

ஆனாலும், இந்த காலகட்டத்தில் குடும்ப பந்தத்தை அழிப்பதே சத்துருவின் முக்கியமான திட்டமாக இருக்கிறது. இந்த சவால்களை மேற்கொள்ளும்படி பங்காளர்களின் குடும்பங்களுக்காக Dr. பால் தினகரன் குடும்பத்தினரும், அர்ப்பணிப்பு கொண்ட ஜெப வீரர்களும் தொடர்ந்து ஜெபிப்பதற்காக இயேசு அழைக்கிறார் குடும்ப ஆசீர்வாதத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மீண்டும் இணைந்த மற்றும் தெய்வீக பாதுகாப்பையும் ஆசீர்வாதத்தையும் ஆண்டவரிடமிருந்து பெற்ற அநேக குடும்பங்கள் குறித்த சாட்சிகள் எங்களுக்கு வந்து சேருகின்றன.

## ஜெபத்தின் வல்லமையினால் மீண்டும் கட்டப்பட்ட ஒரு குடும்பத்தைக் குறித்த சாட்சி

### போராட்டத்தின் பிறகு ஆசீர்வாதம்

பாக்கியலட்சுமி - பாவேந்தன் இருவரும் 2009-ம் ஆண்டு திருமணத்தில் இணைந்தனர். எதிர்காலத்தைக் குறித்து மிகுந்த நம்பிக்கையுடன் இல்லற வாழ்க்கையைத் தொடங்கினர். திருமண வாழ்க்கை ஆரம்பத்தில் மிகவும் மகிழ்ச்சியாக காணப்பட்டது. அதிலும், திருமணமானதும் தான் கர்ப்பமடைந்ததைக் கண்டு பாக்கியலட்சுமி மிகவும் சந்தோஷமடைந்தார்கள். ஆனாலும், வரதட்சணை உள்ளிட்ட குடும்பம் சார்ந்த எதிர்பார்ப்புகளினால் அவர்களுக்குள் கருத்துவேறுபாடு ஏற்பட்டு, தம்பதிய ருக்குள் அடிக்கடி சண்டை நடந்தது. பாக்கியலட்சுமி அநுசரித்து செல்லும் குணம் உடையவர்களாக இருந் தாலும் கணவரின் வீட்டில் அவர்களை கடுமையாக நடத்தினர். எப்போதும் சண்டை நடந்துகொண்டே இருந்தது. தனி நபராக உழைத்து, பாக்கியலட்சுமியை வளர்த்த அவர்களது தாயார், மகளின் திருமண வாழ்க்கை சந்தோஷமாக அமைய ஏகப்பட்ட பணத்தை செலவழித்தும், மகளின் நிலைமையைக் கண்டு மிகுந்த வருத்தமடைந்தார்கள். விவாகரத்து தவிர்க்க முடியாது என்ற அளவுக்கு நிலைமை மோசமானது. அதனால், அடுத்து என்ன செய்வ தென்று தெரியாமல் பாக்கியலட்சுமி திகைத்தார்கள். இந்நிலையில் ஒருவர் மூலமாக, திருச்சி இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தைக் குறித்து கேள்விப் பட்டு, ஆறுதலையும் வழிகாட்டுதலையும் பெறுவதற் காக ஜெப கோபுரத்திற்கு வந்தார்கள். அங்கே, குடும்ப ஆசீர்வாதத் திட்டத்தைக் குறித்து அறிந்து, தனது குடும்பம் ஒப்புரவாகவேண்டும் என்ற கட்டாய

### குடும்ப ஆசீர்வாதத் திட்டத்தின் சிலாக்கியங்கள்

- நீங்கள் அனுப்பும் பொருத்தனை காணிக்கை ரூ.5,000/- தொகையை எட்டியதும் உங்கள் குடும்பத்திற்கான வாக்குத்தத்த வசனம் அடங்கிய பிரத்தியேக அழகிய சான்றிதழ் அனுப்பி வைக்கப்படும்.
- தம்பதியருக்கு Dr. பால் தினகரன் குடும்பத்தினரிடமிருந்து விசேஷித்த திருமண வாழ்த்து அனுப்பி வைக்கப்படும்
- ஆண்டுதோறும் திருமணநாளின்போது ஜெப வீரர்கள் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஜெபிப்பார்கள்
- மாதந்தோறும் நீங்கள் தொடர்ந்து ரூ.500/- அல்லது அதற்கு மேற்பட்ட காணிக்கை அனுப்பினால், உள்ளமுடைந்த மக்களுக்கும், குடும்பங்களுக்கும் சேவை செய்து தேவனின் கட்டளையை நிறைவேற்ற உதவியாக அமையும்.

தேவையின் மத்தியில் அவர்கள் தன் கணவர் மற்றும் குழந்தையின் புகைப்படங்களை கொடுத்து, விசுவாசத்தோடு அத்திட்டத்தில் இணைந்தார்கள். அவர்கள் ஜெபித்து, ஜெபக் கூட்டங்களில் பங்குபெற்ற போது, அலைக்கழிக்கப்பட்ட வாழ்க்கையில் அற்புத விதமாக சமாதானம் தென்பட ஆரம்பித்தது. எதிர் பார்க்கப்பட்ட நீதிமன்ற வழக்கு முடிவடையவே இல்லை. ஆனால், ஆண்டவரின் தெய்வீக இடைப் படுதலினால் பாக்கியலட்சுமியும் பாவேந்தனும் ஒப்புரவாகினர்.

கிருபையின் இந்த ஆரம்ப அடையாளங்களைக் கண்டு ஊக்கம் பெற்ற பாக்கியலட்சுமி, அடிக்கடி இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்கு வந்தார் கள்; இயேசுவின்மீது விசுவாசத்தில் பெலப்பட்டார்கள். தேவன் அவர்கள் ஜெபத்திற்கு பதிலளித்தார்; 2016 நவம்பர் மாதம் அவர்களுக்கு மகன் பிறந்தான். குடும்ப ஆசீர்வாதத் திட்டத்தின் மூலம் தேவன் அவர்களை ஆசீர்வதித்ததற்கு இது சாட்சியாக அமைந்தது. ஆனாலும் பாவேந்த னுக்கு நிரந்தர வேலையில்லாதது போராட்ட மாகவே காணப்பட்டது.

அவரது வேலையில் ஏற்ற பலன் கிடைக்க வேண்டும் என்று அவர்கள் இருவரும் இணைந்து இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தின் ஜெப உதவி யையும் வழிகாட்டலையும் நாடினர். தேவனுடைய கிருபையால் பாவேந்தனுக்கு அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் நிரந்தர வேலை கிடைத்தது. அவர்க ளுடைய பொருளாதார நெருக்கடி மாறியது; குடும்பம் ஸ்திரப்பட்டது.

அவர்கள் விசுவாச வாழ்க்கையின் காரணமாக, எதிர்பாராத ஆசீர்வாதங்கள் கிடைத்தன. 2023-ம் ஆண்டில் சொந்த வீடு கட்டினர். அது வாழ்க்கையை மறுரூபமாக்கும் ஜெபத்தின் வல்லமைக்கு சாட்சியாக விளங்குகிறது. இன்றைக்கு பாக்கியலட்சுமி - பாவேந்தன் தம்பதியர் தாங்கள் கடந்து வந்த உபத்திர வங்களையும் வெற்றிகளையும் திரும்பிப் பார்த்து, இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் அர்ப்பணிப்புள்ள ஜெப வீரர்கள் தொடர்ந்து ஏறெடுத்த பிரார்த்தனைகள் மூலமே தங்கள் வாழ்க்கை மறுரூபமாக்கப்பட்டது என்று நன்றி தெரிவிக்கிறார்கள்.

---

**பாக்கியலட்சுமியின் குடும்பத்தை போலவே, ஜெபத்தின் வல்லமையினால் உங்கள் குடும்பமும் தேவனால் சீர்ப்படுத்தப்படலாம்; பரிபூரண ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் குடும்பமும் ஜெபத்தின் மூலம் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள இன்றே குடும்ப ஆசீர்வாதத் திட்டத்தில் இணைந்திடுங்கள்.**

---

### குடும்ப ஆசீர்வாதத் திட்டம் பொருத்தனை படிவம்

குடும்ப ஆசீர்வாதத் திட்டத்தில் இணைந்திட ரூ................/- நன்கொடை அனுப்புகிறேன்.

பெயர்: ..................................... பிறந்த தேதி: .............................. திருமண நாள்: .........................

முகவரி..............................................................................................................................................

.............................................................................................................. பின்கோடு: .................................

மொபைல்: .......................................................................... இமெயில்: ..................................................

நான் மாதந்தோறும் ☐ ரூ.300/- ☐ ரூ.500/- ☐ ரூ.1,000/- அனுப்புகிறேன்

உங்கள் குடும்ப புகைப்படம் ஒன்றினை fbp@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது +91 98409 00477 என்ற எண்ணுக்கு வாட்ஸ்அப் மூலம் பெயர், பிறந்த தேதி மற்றும் மொபைல் எண்ணை குறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம்.

QR Codeஐ ஸ்கேன் செய்யவும்

**நன்கொடை அனுப்புவதற்கான எளிய வழிகளை இந்த இதழின் 8-ம் பக்கத்தில் காணலாம்.**

ஊழியத்தில் என் உடன் பங்காளரே,
சுவிசேஷத்தை அறிவிக்கும் நம் பயணத்தை
திரும்பிப் பார்க்கும்போது,
**"என்னுடைய வல்லமையை உன்னிடத்தில்
காண்பிக்கும்படியாகவும், என் நாமம்
பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும்
உன்னை நிலைநிறுத்தினேன்"**
(யாத்திராகமம் 9:16) என்ற வேத
வசனம் எனக்கு நினைவுக்கு
வருகிறது.



# உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...

இந்த நோக்கத்தை மனதில் கொண்டும், இந்த ஊழியத்தில் நீங்கள் வகிக்கும் முக்கிய பங்கை கருதியும் இதை உங்களுக்கு எழுதுகிறேன். நாங்கள் செய்யும் ஊழியத்தில் உங்கள் அர்ப்பணிப்பும் ஆதரவுமே இன்றியமையாததாக உள்ளன. பூமியின் எல்லா முனைகளிலும் தமது நாமம் பிரஸ்தாபிக்கப் படவேண்டும் என்ற தேவனுடைய பெரிதான திட்டத்தில் நாம் இணைந்து அங்கம் வகித்து, நமக்குக் கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றி வருகிறோம்.

இம்மாதத்திலும் ஆண்டவர், அநேகரை தம்மண்டை இழுக்கும் நோக்கத்தை நிறைவேற்றும் வண்ணம், உங்கள் மூலமாக பெரிதான அளவில் தம் மகிமையை விளங்கப்பண்ணுவார் என்று எதிர்பார்த்திருக்கிறேன். நீங்கள் பங்காளராக இருப்பது அதிக மகிழ்ச்சி. தொடர்ந்து ஊழியத்தில் எங்களுக்கும், பல லட்சம் மக்களுக்கும் நீங்கள் ஏறெடுக்கும் ஜெபத்தின் மூலமாகவும், வழங்கும் ஆதரவின் மூலமாகவும் ஆசீர்வாதமாக விளங்குவீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

ஆண்டவர் ஊழியத்தில் செய்துவரும் பெரிதான காரியங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

## துதி அறிக்கை

i) 2024, ஆகஸ்ட் 25-ம் தேதி, புதுச்சேரியில் ஆசீர்வாத கூட்டம் நடைபெற்றது. அதில் என் மகன் சாமுவேல் தினகரன் தேவ செய்தியளித்து, வந்திருந்த மக்களுக்காக ஊக்கமாக ஜெபித்தார். ஆண்டவர் மக்கள் மத்தியில் வல்லமையாக அசைவாடினார்; அநேகர் தேவனுடைய தெய்வீக தொடுதலை உணர்ந்தார்கள்.

ii) 2024, செப்டம்பர் 8-ம் தேதி, சென்னை ஜே.சி. ஹவுஸ் ஜெப கோபுரத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆசீர்வாதக் கூட்டத்தில், தேவன் எவ்வாறு நமக்கு முன் சென்று, தம்முடைய சமுகத்தினால் வாழ்வில் நம்மை உயர்த்துகிறார் என்று நான் தேவ செய்தி வழங்கினேன். இந்தக் கூட்டத்தினால், கர்த்தருடைய சமுகத்தின்மேல் நம்பிக்கை கொள்ளும்படி மக்கள் வழிநடத்தப் பட்டனர். ஜனங்கள் தங்கள் இருதயங்களில் கர்த்தரின் பிரசன்னம் நிரம்பியவர்களாக கடந்து சென்றனர்.

iii) 2024, செப்டம்பர் 14-ம் தேதி சென்னை வானகரத்தில் நடைபெற்ற மாதாந்திர அற்புத உபவாச ஜெபத்தில் திரளான மக்கள், பெருத்த எதிர்பார்ப்புடன், உபவாசத்தோடு தேவனை தேடி வந்தனர். என் மனைவி இவாஞ்சலின் பால் தினகரன் வழங்கிய தீர்க்கதரிசன செய்தி வல்லமையாய் மக்களை சென்றடைந்தது. தேவன் மக்கள் வாழ்வில் அற்புதங்களைச் செய்தார். சகோதரி செண்பகம், கடுமையான வயிற்றுவலியினால் அவதிப்பட்டு, பல்வேறு ஸ்கேன் பரிசோதனைகளை செய்து சிகிச்சை பெற்றார். ஆனாலும், பயனில்லை. கடைசியில் அவர்கள் இயேசு அழைக்கிறார் அற்புத உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டார்கள். ஜெப வேளையில் தேவன் அவர்களை பூரணமாக சுகப்படுத்தினார்.

iv) ஜெபம் மற்றும் தீர்க்கதரிசன வல்லமை ஆறு மாத கால சான்றிதழ் பயிற்சியின் இன்னொரு அணிக்கான பயிற்சி, ஆகஸ்ட் 28-ம் தேதி தொடங்கி சென்னை ஜே.சி.ஹவுஸ் ஜெப கோபுரத்தில் நடந்து வருகிறது. இதில் 97 பேர், ஆண்டவருக்கு ஊழியம் செய்ய பயிற்சி பெற்று வருகின்றனர். நம்முடைய அருமையான பங்காளர்களை பயிற்றுவித்து,

அவர்கள் மூலம் ஆவிக்குரிய வரங்கள் செயல்படும் படியாய் ஜெபித்து, வரும் நாட்களில் தேவன் அவர்களை வல்லமையாக பயன்படுத்துவார் என்று ஊக்கப்படுத்தும் சிலாக்கியமான வாய்ப்பு எங்கள் குடும்பத்தினருக்கு அமைந்தது. இயேசு அழைக் கிறார் ஊழியத்தின் மூலம் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய நீங்கள் ஆர்வமாயிருப்பீர்களானால், இந்தப் பயிற்சியில் இணைந்துகொள்ளுங்கள். prayer academy@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரியில் அல்லது 6380752257 என்ற எண்ணில் தொடர்புகொண்டு இது குறித்த தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

### ஜெப விண்ணப்பங்கள்

**கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக பெதஸ்தா ஜெப மைய ஊழியத்தை நடத்திவரும் தேவனை என்னோடு சேர்ந்து ஸ்தோத்திரியுங்கள்**

இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம் - இயேசு அழைக்கிறார் இணைய தளம், செயலி மற்றும் மென்பொருள் உருவாக்கம்

**"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15)**

புதிய மென்பொருள் உருவாக்குதல், இயேசு அழைக்கிறார் இணையதளத்தை யும், செயலியையும் (App) பயனர் அனுபவம் மேம்படும்படியும், தனிப்பட்டவிதத்தில் பொருத்தமான ஆவிக்குரிய செய்திகளை பெற்றுக்கொள்ளும்படியும் திருத்தியமைத்தல் போன்ற பணிகள் அடங்கிய இம்மானுவேல் டிஜிட்டல் திட்டத்தை அறிமுகம் செய்ய எண்ணியுள்ளோம். இந்தப் புதிய செயலியை பயன் படுத்துகிறவர்கள், ஜெப கோபுரத்தில் கிடைக்கும் அனுபவங்களை தனிப்பட்டவிதத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அவர்கள் எப்பொழுதெல்லாம் எதற்காக ஊழியத்தைத் தொடர்புகொண்டுள்ளார்கள் என்ற விவரங்களையும், தனிப்பட்டவிதத்தில் அவர்க ளுக்கு பொருத்தமான, வயதுக்கேற்ற ஆவிக்குரிய செய்தி களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

புதிய இணையதளத்தில், வெவ்வேறு பிரச்னைகள் மற்றும் தேவைகளுக்கேற்ற இணையபக்க செய்திகள், மேம்பட்ட பயன்பாட்டு அனுபவம், வீடியோ சேகரிப்பு மற்றும் ஐந்து மொழிகளில் செய்திகள் அடங்கியிருக் கும். உங்கள் பகுதி ஜெப கோபுரத்தில் நடைபெறும் கூட்டங்களைப் பற்றியும், வேலைவாய்ப்பு பற்றியும் எளிதாக தெரிந்துகொள்ளலாம்.

2025, ஆகஸ்ட் மாதம் புதிய மென்பொருளை நடைமுறைப்படுத்தி, டிஜிட்டல் முறை ஊழியத்தை மேம்படுத்த எண்ணியுள்ளோம். இந்தப் புதிய மென் பொருள் திட்டம், ஜெப விண்ணப்பங்களை ஒழுங்கு படுத்தும்; தனிப்பட்டவிதத்தில் பொருத்தமான ஆவிக் குரிய செய்திகளை கொண்டு சேர்க்கும்; அவசர தேவையில் இருப்பவர்கள், தங்கள் பகுதி ஸ்தானாபதி களோடு தொடர்புகொள்ள உதவும். கூட்டங்களுக்கான அழைப்புகளை பெற உதவும். இந்த மென்பொருள், ஜனங்களுக்கு தனிப்பட்டவிதத்தில் பொருத்தமாகவும், விரைவாகவும் சேவை செய்யும்படி ஊழிய செயல்பாடு களை மேம்படுத்தும். எல்லா சேவைகளும் இலவசமா கவே வழங்கப்படும். பயன்படுத்தும் மக்களின் ஆவிக் குரிய வாழ்க்கையை மேம்படுத்துகிற, ஊழியம் உலகமெங்குமுள்ள மக்களை சந்திக்க உதவும் இந்த திட்டத்திற்கு ரூ.5 கோடி செலவாகும். இதற்கு உங்கள் ஜெபமும் ஆதரவும் மிகவும் அவசியமாயிருக்கிறது.

### காருண்யா பல்கலைக்கழகம் - விசேஷித்த தொழில்நுட்ப வல்லுநர்களை எழுப்புதல்

**"விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக் கிறதுபோல..." (2 கொரிந்தியர் 8:7)**

விசேஷித்த ஆவி கொண்ட பட்டதாரிகளை சிறந்த கல்வியறிவு மற்றும் முழுமையான வளர்ச்சி கொண்ட வர்களாக உருவாக்க காருண்யா பல்கலைக்கழகம் அர்ப்பணிப்போடு செயலாற்றி வருகிறது.

கல்வியில் சிறந்திருப்பதோடு, ஆவிக்குரியவிதத்தி லும் பெலப்படுத்தப்பட்டு, உலகை பிரகாசிக்கச் செய்யும் படியான வழிகாட்டுதல்களோடு மாணவர்களை காருண்யா பயிற்றுவிக்கிறது (1 பேதுரு 2:9).

காருண்யா பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானிய குழுவின் (UGC) பிரிவு 1-ல் இடம் பெற்றுள்ளது; இதனால், உலக அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அதன் நற்பெயர் உயர்ந்துள்ளது. சமீபத்தில், ஏரோஸ் பேஸ் படிப்புக்கு முதன்முறையாக 6 ஆண்டு காலமும், பயோமெடிக்கல் மற்றும் ரோபோடிக்ஸ் ஆகிய படிப்புகளுக்கு 3 ஆண்டு காலமும் தேசிய அங்கீகார வாரியத்தின் (NBA) அங்கீகாரம் கிடைத்துள்ளது.

காருண்யா பல்கலைக்கழகத்தில் படித்த பழைய மாணவ மாணவியர் உலகமெங்கும் 50,000க்கும் மேலானோர் இருப்பதால், பல்வேறு துறைகளில் விசுவாசம், விசேஷித்த அறிவு, சேவை ஆகியவற்றை வெளிப்படுத்தி, உலக அளவில் மாற்றத்தைக் கொண்டு வருகிறவர்களாக விளங்குகிறார்கள்; இதனால் கணக்கற்ற மக்களின் வாழ்க்கையில் நன்மையான மாற்றம் ஏற்படுகிறது.

### பெதஸ்தா ஊழியம் - தேவ மகிமை தங்கியிருக்கும் இடம்

**"இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம்; இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம் பண்ணுவேன்" (சங்கீதம் 132:14)**

ஜெபிக்கவும், தேவனை ஸ்தோத்திரிக்கவும் விரும் பும் மக்களுக்கு பெதஸ்தா ஜெப மையம் அடைக்கலம் தரும் இடமாக விளங்குகிறது. பெதஸ்தா தொடங்கப்

பட்டதிலிருந்து, பரிசுத்த சூழ்நிலையில் பல லட்சம் மக்களுக்கு ஆறுதலையும் சமாதானத்தையும் அளித்து வருகிறது. இப்போது வரைக்கும் 77,50,164 பேர் பெதஸ்தாவில் தேவனுடைய அற்புதங்களை அனுபவித்துள்ளார்கள்.

சிந்து விஜயன் என்ற சகோதரிக்கு திருமணமாகி ஏழு ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லை. அதனால் அவமானத்தை சந்தித்தார்கள். அவர்கள் பெதஸ்தா ஜெப மையத்திற்கு சென்று ஜெபித்த அடுத்த மாதமே கருவுற்று அழகிய பெண் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார்கள்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, பெதஸ்தா ஜெப மைய ஊழியத்தை நடத்தி வரும் தேவனை என்னோடு சேர்ந்து ஸ்தோத்திரியுங்கள். இந்த ஜெப மையத்தைக் குறித்த விரிவான தகவல்களை இந்த இதழின் 20-வது பக்கத்தில் காணலாம்.

**பிரார்த்தனை திருவிழாக்கள் - வாஞ்சையோடு சுவிசேஷத்தை அறிவித்தல்**

**"சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை, திரளான ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள்; அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார்" (மத்தேயு 15:30)**

சத்தீஸ்கர் மாநிலம் ஜக்தல்பூரில், 2024 நவம்பர் 8 முதல் 10-ம் தேதி வரைக்கும் பாஸ்டர் பிரார்த்தனை திருவிழாவினை நடத்துவதற்கு குடும்பமாக செல்கிறோம். மேலும், ஜார்க்கண்ட் மாநிலம் ஜாம்ஷெட்பூரில் 2024 டிசம்பர் 6 மற்றும் 7-ம் தேதிகளில் UTurn தேசிய வாலிபர் திருவிழாவை ஏற்பாடு செய்திருக்கிறோம். இதில், வாலிபர்கள் தங்கள் அடிமைத்தன பழக்கங்கள், கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, வாழ்வில் பிரகாசிக்கும்படி பரிசுத்த ஆவியினால் பெலப்படுத்தப்பட நாங்கள் ஜெபிப்போம். இந்தக் கூட்டங்களில் தேவன் விசேஷித்த காரியங்களை நடப்பிக்க எங்களோடு இணைந்து ஜெபியுங்கள் அல்லது தாங்குங்கள். இதுவரை இயேசுவின் அன்பை ருசித்திராத மக்களை நாம் இணைந்து சந்தித்து, தங்கள் வாழ்வை மாற்றும் தேவனுடைய வல்லமையை அவர்களும் அனுபவிக்க உதவுவோம்.

**காருண்யா மருத்துவமனை - குணப்படுத்துவதன் மூலம் நம்பிக்கையளித்தல்**

**"வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" (மத்தேயு 10:8)**

நலிவுற்ற ஆயிரக்கணக்கான மக்களுக்கு மருத்துவ பராமரிப்பு கொடுத்து வரும் காருண்யா மருத்துவமனைக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். மருத்துவ உதவி கிடைக்காமல் தவிக்கிற மக்களுக்கு இந்த மருத்துவமனை நம்பிக்கையாக விளங்கி வருகிறது; தேவைப்படுவோருக்கு இலவச மருத்துவ சிகிச்சையும் வழங்கப்படுகிறது. மூட்டுமாற்று மற்றும் மூட்டு, தைராய்டு, நுண்துளை, குடலிறக்கம், குடல் வால், கருப்பை, முகச்சீரமைப்பு, பித்தப்பை உள்ளிட்ட பெரிய அறுவைசிகிச்சைகள் குறைந்த கட்டணத்தில் செய்யப்படுகின்றன.

மணிகண்டன் என்பவர் அதிகமான சுவாச பிரச்னையோடு காருண்யா மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டார். அவருக்கு நோய் எதிர்ப்பு மண்டலத்தில் கோளாறும் (sepsis), நுரையீரலில் நோய் தொற்றும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தேவனுடைய கிருபையால், மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிறந்த சிகிச்சையின் மூலம் அவரது உயிர் காக்கப்பட்டது. தேவனுடைய மகிமைக்காக நோயுற்றவர்களுக்கு சேவை செய்யும், ஏழைகளை பராமரிக்கும் இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

**விசேஷித்த நாட்கள்:**

அக்டோபர் 10-ம் தேதி, என் தந்தை சகோ.டி.ஜி.எஸ். தினகரன் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமாகிய ஆசீர்வாதத்தையும், இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கான தரிசனத்தையும் பெற்றார். அப்போதிலிருந்து, தேவன் நான்கு தலைமுறைகளாக எங்கள் குடும்பத்திற்கு அதிக உண்மையுள்ளவராக இருந்து வருகிறார்; கோடிக்கணக்கானோருக்கு ஊழியம் செய்யும்படி விசேஷித்த ஆவிக்குரிய வரங்களை தந்து ஆசீர்வதித்துள்ளார். உள்ளமுடைந்த மக்களுக்கு கிறிஸ்துவின் அன்போடும் மனதுருக்கத்தோடும் ஊழியம் செய்யும்படியும், தொடர்ந்து இதே அபிஷேகத்தில் நிலைத்திருக்கும்படியும் எங்கள் குடும்பத்தினர் ஒவ்வொருவருக்காகவும் ஜெபியுங்கள்.

**எதிர் வரும் கூட்டங்கள்**

அக்டோபர் 2, 2024 – ஆராதனை மாலை, சென்னை
அக்டோபர் 12, 2024 – அற்புத உபவாச ஜெபம், சென்னை
நவம்பர் 2, 2024 – சிறப்பு ஆசீர்வாதக் கூட்டம், கோயம்புத்தூர்
நவம்பர் 8-10, 2024 – பாஸ்டர் பிரார்த்தனை திருவிழா, ஜக்தல்பூர்
நவம்பர் 2, 2024 – அற்புத உபவாச ஜெபம், சென்னை
டிசம்பர் 6-7, 2024 – UTurn தேசிய வாலிபர் திருவிழா, ஜாம்ஷெட்பூர்

இந்தக் கூட்டங்களுக்காக ஜெபிக்கும்படியும், உங்களால் இயன்ற வழிகளில் ஆதரிக்கும்படியும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பு பங்காளரே, எல்லாவற்றுக்கும் மேலாக இந்த மாதத்திலும், இனி வரும் மாதங்களிலும் நீங்கள் தேவனுடைய சகல நன்மைகளையும் அனுபவிக்க வேண்டும் என்று ஜெபித்து வாழ்த்துகிறேன். நிச்சயமாகவே, ஆண்டவரின் உச்சிதமான ஆசீர்வாதங்களும் இரக்கமும் ஆயுள்பரியந்தம் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் தொடரும்.

தொடர்ந்து உங்களுக்காக ஜெபிக்கிறேன்; மனதார வாழ்த்துகிறேன்.

உங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் சகோதரன்,

Dr. பால் தினகரன்.

# Karunya

ARISE AND SHINE

DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++

CATEGORY 1
Institution
UGC GoI.

## EXCELLENCE
ACCREDITED BY
NBA
NATIONAL BOARD OF ACCREDITATION

### 6 YEARS NBA for Aerospace Engineering

Karunya University has achieved a remarkable milestone with its B.Tech Aerospace Engineering program being awarded an NBA accreditation for an exceptional 6-year period. This recognition is a testament to the program's cutting-edge facilities, including supersonic wind tunnels and UAV labs, alongside mentorship from ISRO experts. With specialized training in propulsion, aerodynamics, and wind energy, students are prepared for leadership in the aerospace industry. The program also provides opportunities for international internships and research, positioning Karunya University as a hub for future innovators.

### 3 YEARS NBA for Biomedical & Robotics

Additionally, the university's B.Tech Biomedical and Robotics Engineering programs have secured a prestigious 3-year NBA accreditation. The Biomedical Engineering program, established in 2009, blends biology with engineering, offering advanced lab experience and collaborations with leading hospitals.

Similarly, the Robotics Engineering program equips students with real-world skills through cutting-edge labs and industry partnerships with companies like Fanuc and Hyundai. These accreditations reflect Karunya University's unwavering commitment to academic excellence, innovation, and global impact in healthcare and technology.



**Karunya Institute of Technology and Sciences,**
Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114. Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu
**Toll Free: 1800 88 99 888, 1800 42 54 300**

APPLY NOW!
Scan QR Code to Start the Admission Process

Accreditation: A++ NAAC | ACCA | ICAR
Approvals: Government of India Ministry of Education | AICTE
Global Rating: QS STARS Rating System – Facilities / Inclusiveness | QS STARS Rating System – Teaching
India Rating: QS I-GAUGE Diamond
India Ranking: nirf National Institutional Ranking Framework
Global Ranking: THE World University Rankings 2024 – 1201-1500 Band • 1045th Rank in Research

Programs Offered: ENGINEERING | AGRICULTURE | MANAGEMENT | ARTIFICIAL INTELLIGENCE | COMMERCE | FORENSIC SCIENCE | DIGITAL FORENSICS | MEDIA | ONLINE MBA



# பெதஸ்தா ஜெப மையம்

## கூடாதது என்று கூறப்படுபவை நடக்கும்படி ஜெபங்கள் ஏறெடுக்கப்படும் ஸ்தலம்

**"இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்" (2 நாளாகமம் 7:15)**

மகாராஷ்டிரா மாநிலம் பூனாவிலுள்ள கருணா ஜெப கோபுரத்தில் மூத்த போதகராக இருப்பவர், போதகர் அமான் வர்மா. பெதஸ்தா ஜெப மையத்திற்கு வந்ததன் மூலம் அவரது ஊழியத்தில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறித்த சாட்சியை அவர் பகிர்ந்து கொள்கிறார்.

**போதகர் அவர்களே, உங்கள் ஊழியப் பயணத்தையும், 2013-ம் ஆண்டு முதல் நீங்கள் நிறைவேற்றி வரும் தரிசனத்தையும் பகிர்ந்துகொள்ள முடியுமா?**

**போதகர் அமான் வர்மா:** நிச்சயமாக பகிர்ந்து கொள்கிறேன். 2013-ம் ஆண்டு முதல் பூனாவிலுள்ள கருணா ஜெப கோபுரத்தில் மூத்த போதகராக ஆண்டவருக்கு ஊழியம் செய்து வருகிறேன். ஆத்துமாக்களை ஆதாயம் செய்து சபையை பெலப்படுத்துவதே ஆண்டவர் எனக்கு கொடுத்துள்ள தரிசனமாகும். இத்தனை ஆண்டுகளும் ஆண்டவர் எங்கள் ஊழியத்தின் மூலம் கிரியை செய்து வருகிறதை காண்பது பாக்கியமாயிருக்கிறது.



**இதை அறியும்போது பெரிய ஊக்கம் கிடைக்கிறது. 2024 ஜூன் மாதம் நீங்கள் பெதஸ்தா ஜெப மையத்திற்கு வந்தபோது, குறிப்பிடத்தக்க விஷயம் நடந்ததாக அறிந்திருக்கிறேன். அந்த அனுபவத்தை விளக்க முடியுமா?**

**போதகர் அமான் வர்மா:** ஆம், அது உண்மையில் முக்கியமான தருணம்தான். 2024 ஜூன் மாதம், சொந்த இடத்தில் ஒரு ஜெப கோபுரத்தை கட்டுவதற்கு ஆண்டவருடைய இரக்கத்திற்காக ஜெபிக்கும்படி நான் மற்ற ஜெப வீரர்களுடன் பெதஸ்தா ஜெப மையத்திற்கு வந்தேன். ஜெபித்து விட்டு பூனாவுக்கு திரும்பியதும், நாங்கள் எதிர்பார்த்ததற்கும் மேலாக ஆண்டவர் ஒரு அற்புதத்தை செய்து எங்களை ஆசீர்வதித்தார். ஒரு மாத காலத்திற்குள் 2024 ஜூலை மாதம், சொந்தமாக 2250 சதுர அடி நிலத்தை வாங்கினோம்.

**அது பெரிய விஷயம்! உங்கள் சபையினர் இந்த ஆசீர்வாதத்தைக் கண்டு என்ன செய்தார்கள்?**

**போதகர் அமான் வர்மா:** அதிக சந்தோஷமடைந்தார்கள். ஆண்டவர் வழிநடத்தியபடி, அவருடைய வேலைக்கு கொடுக்க விருப்பமுள்ள யாரும் கொடுக்கலாம் என்று சபையில் அறிவிப்பு கொடுத்தோம். ஆச்சரியப்படும்வண்ணம் 13 நாள்களுக்குள் ஆண்டவர் தமது ஜனங்கள் மூலம் தேவையான 15 லட்சம் ரூபாயைக் கொடுத்தார். சபையில் அத்தனை பேரும் (100%) ஆண்டவருடைய பணிக்காக விதைப்பதற்கு முன் வந்தது என்னை தொட்டது.

> **"நாங்கள் எதிர்பார்த்ததற்கும் மேலாக ஆண்டவர் ஒரு அற்புதத்தை செய்து எங்களை ஆசீர்வதித்தார்"**

**இது பெரிய சாட்சி! உங்கள் சபையில் அநேகர் எளிமையான பொருளாதார பின்னணி கொண்டவர்களாயிருந்தாலும், அவ்வளவு பெரிய தொகையை அவர்களால் எப்படி திரட்ட முடிந்தது?**

**போதகர் அமான் வர்மா:** அவர்கள் இயேசுவின் மேல் கொண்டிருக்கும் அன்புக்கும், அவருடைய ராஜ்யத்திற்காக கொண்டிருக்கும் அர்ப்பணிப்புக்கும் இது மெய்யான சாட்சியாயிருக்கிறது. சபையில் அநேகர் தியாகத்துடன் கொடுத்தார்கள். சிலர் தங்களின் திருமணத்திற்கான தங்கத்தை கொடுத்தார்கள்; சிலர் இன்ஸ்யூரன்ஸ் பத்திரத்தை ஒப்படைத்து கொடுத்தார்கள்; சிலர் மியூச்சுவல் பண்ட் மற்றும் பங்குகளை விற்றுக் கொடுத்தார்கள். சிலர் சொந்த தொழில் தொடங்குவதற்காக வைத்திருந்த சேமிப்பை கொடுத்தார்கள்; சிலர் ஓய்வூதிய சேமிப்பிலிருந்து கொடுத்தார்கள். ஆண்டவருடைய கிருபையால் மாத்திரமே நடக்கக்கூடிய விசுவாசத்தையும் உதார குணத்தையும் காட்டக்கூடிய நிகழ்வாக அது அமைந்தது.

**கர்த்தரின் கரம் செயல்பட்டதற்கு ஆதாரமாக அது உள்ளது. பெதஸ்தாவுக்கு நீங்கள் வந்து சென்றபிறகு கிடைத்த இந்த எல்லா ஆசீர்வாதத்தையும் பார்க்கும் போது எப்படி உணருகிறீர்கள்?**

**போதகர் அமான் வர்மா:** ஆண்டவர் எங்கள் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் செயல்பட்டதைக் கண்டு ஆச்சரியத்தாலும் நன்றியாலும் நிரம்பியிருக்கிறேன். தேவன் அருளிய ஆச்சரியமான ஆசீர்வாதங்களுக்காக அவரை துதிக்கிறேன். Dr. பால் தினகரனின் அருமையான ஊழியத்திற்காக மிகவும் நன்றி தெரிவிக்கிறேன். இந்த ஊழியம் எங்களை அதிகமாய் ஊக்குவிக்கிறது.

**உங்கள் வல்லமையான சாட்சியை எங்களோடு பகிர்ந்து கொண்டதற்காக நன்றி போதகர் அமான். ஆண்டவர் தொடர்ந்து உங்கள் ஊழியத்தில் கிரியை செய்வதை அறியும்போது மிகவும் உற்சாகம் கிடைக்கிறது.**

**போதகர் அமான் வர்மா:** தேவனை துதிக்கும்படி இந்த வாய்ப்பை கொடுத்ததற்காக உங்களுக்கு நன்றி. தேவனுக்கே சகல துதியும், கனமும், மகிமையும் உண்டாவதாக.

**போதகர் அமான் வர்மாவை போல நீங்களும் பெதஸ்தா ஜெப மையத்திற்கு வந்து, உங்கள் தேவைகளுக்காக ஜெபித்து, கூடாதது என்று கூறப்பட்ட காரியங்கள் நடப்பதை காணலாம்; எல்லா உபத்திரவங்களிலிருந்தும் விடுதலை பெறலாம்.**

## பெதஸ்தா ஜெப மையத்தின் சிறப்பம்சங்கள்

- 5 சிறு மண்டபங்கள், தேவதூதன் நிற்பது போன்ற பெதஸ்தா குளம்
- சிலுவைப் பாடுகளை விளக்கும் 7 ஸ்தலங்கள்
  அமைதி தவழும் சிலுவை தியான மையம்
- அற்புதங்களை அனுபவிக்கும் தரிசன ஸ்தலம்
- ஆலோசனை மையம் மற்றும் ஆறுதலின் ஜெபம்
- சிறுவர் பூங்கா
- தங்கும் வசதி (ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியாக தங்கும் பொது அரங்கு - Dormitory)
- சிற்றுண்டி சாலை
- வெகுமதி மற்றும் புத்தக சாலை
- பெதஸ்தா ஜெபம் மண்டபம் தினமும் காலை 6 முதல் இரவு 8:30 மணி வரை திறந்திருக்கும்



கோயம்புத்தூர் மாநகரிலிருந்து சிறுவாணி செல்லும் வழியில் 25 கி.மீ. தொலைவில் காருண்யா நிகர்நிலைப் பல்கலைக்கழகம் அருகில் பெதஸ்தா ஜெப மையம் அமைந்துள்ளது.

கோயம்புத்தூர், காந்திபுரம் பேருந்து நிலையத்திலிருந்து காருண்யா நகர் - பெதஸ்தாவுக்கு, தடம் எண் 59, 59C, 14C, 14E ஆகிய அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயங்குகின்றன.

ஜாதி, இன, சமயம் உள்ளிட்ட எவ்வித வேறுபாடுமின்றி பெதஸ்தா அனைவரையும் வரவேற்கிறது.

தங்கும் விவரங்களுக்கு தொடர்புகொள்ளுங்கள்:
* மேலாளர், பெதஸ்தா ஜெப மையம், காருண்யா நகர், கோயம்புத்தூர் - 641 114.
* தொலைபேசி: 94878 46601, 6380752344
* பொது அரங்கு Dormitary 9487846545
* மின்னஞ்சல்: bobethesda@jesuscalls.org

# Dr. பால் தினகரன் பதிலளிக்கிறார்

# கேள்வி பதில் Q A




## திரு. மாத்யூ குரியனின் கேள்வி:

## ஞானஸ்நானத்தைக் குறித்து வேதம் என்ன கூறுகிறது? கிறிஸ்தவ விசுவாசத்தில் அது ஏன் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது?

“**நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்**” (அப். 2:38) என்று அப்போஸ்தனாகிய பேதுரு கூறுகிறார். ஞானஸ்நானம் ஒரு சடங்காச்சாரம் அல்ல; அது ஒருவர் பாவத்திலிருந்து மனந்திரும்பி, தன் வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு அர்ப்பணிப்பதை பொதுவெளியில் அறிவிப்பதாகும்.

ஒருவர், தன் பாவத்தை விட்டு மனந்திரும்பும் போது, உள்ளான அந்த மாற்றத்திற்கு, ஞானஸ் நானம் கண்ணால் காணக்கூடிய நிரூபணமாக விளங்குகிறது. அது, தங்கள் பழைய வாழ்வின் வழியை விட்டு, நீதியில் வாழ அர்ப்பணிப்பதை பொதுவெளியில் அறிவிப்பதாகும். மரணத்தில் கிறிஸ்துவுடன் அடக்கம்பண்ணப்பட்டு, நீதிக்குள்ளான புது வாழ்வில் எழும்புதல் என்று வேதம் இதை விளக்குகிறது (ரோமர் 6:2,3; கொலோசெயர் 2:11,12). ஒருவர் நீருக்குள் மூழ்கி பின்னர் எழும்பும்போது, அவர், “நான் பாவத்தை முற்றிலும் விட்டுவிட்டு, நீதிக் குள்ளான வாழ்க்கை நடத்துவதற்கு எழும்புகிறேன்” என்று அறிவிக்கிறார்.

இயேசு தம்முடைய 30-வது வயதில் ஞானஸ் நானம் பெற்றார் (மாற்கு 1:9). அவர் தம் ஞானஸ் நானத்தின் மூலம், உலகத்தின் வழிகளிலிருந்து திரும்பி, தேவனுக்காக வாழும் தம் அர்ப்பணிப்பை பொதுவெளியில் அறிவித்தார். அதேவண்ணமாக, எத்தியோப்பிய மந்திரி, இயேசு பலியிடப்படும் ஆடாக எண்ணப்பட்டதைக் குறித்து பிலிப்பு பேசியதைக் கேட்டதும், மனந்திரும்புதலுக்கும், கிறிஸ்துவை பின்பற்றும் தீர்மானத்துக்குமான புற அடையாளமாக

ஞானஸ்நானம் பெற விரும்பினான் (அப்போஸ்தலர் 8:36-38). ஞானஸ்நானம் அவ்வாறு பொதுவெளி யில் அறிக்கை பண்ணும் முக்கியமான செயலாக இருக்கிறது. மற்றவர்களுக்கு முன்பு தங்கள் விசு வாசத்திற்கு சாட்சியாக வாழ தேவ பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் பெலன் கொடுக்கிறது. ஆனாலும், சில கிறிஸ்தவர்கள் குழந்தை ஞானஸ்நானத்தை கைக்கொள்ளுகிறார்கள். அவர்கள், “ஒருவன் ஜலத் தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனு டைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்” (யோவான் 3:5) என்று இயேசு கூறியதையும், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க சிறுபிள்ளைகளைப்போல மாறுவதின் அவசியத்தை அவர் கூறியதையும் மேற்கோள் காட்டுகிறார்கள் (மத்தேயு 18:3). சிலர், பிள்ளை தானாக விசுவாசத்தை அறிக்கையிட்டு, பாவத்தை விட்டுவிடும் வயது வரைக்கும் ஞானஸ்நானத்தை தள்ளிவைத்தால், அவர்கள் இளமை யிலேயே மரித்து விட்டால் இரட்சிப்பு என்னவாகும் என்று வாதிடுகிறார்கள். ஆகவே, அவர்கள் பெற்றோரின் விசுவா சத்தின் அடிப்படையில், பிள்ளை தன் இயேசுவை பின்பற்றும் தன் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும்; சபை வாழ்வில் முழுமை யாய் பங்கேற்கும் என்ற எதிர்பார்ப்பிலும் குழந்தை யாயிருக்கும்போதே ஞானஸ்நானம் கொடுக்கிறார் கள். எனினும், இயேசு கிறிஸ்துவை ஆண்டவரும் இரட்சகருமாக மனச்சாட்சியுடன் ஏற்றுக்கொள்ளும் போது அது மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது என்று வேதாகமம் கூறுகிறது. “அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர் கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்” (அப்போஸ்தலர் 2:41) என்று எழுதப்பட்டுள்ளது. பாவத்தை விட்டு விட்டு கிறிஸ்துவை பின்பற்ற உறுதியான முடிவு எடுக்கிற உள்ளான விசுவாசத்தின் வெளியரங்கமான அடையாளமாக விளங்குவதே ஞானஸ்நானத்தின் முக்கியமான அம்சம் என்று இது காட்டுகிறது.

பாவத்தை விட்டுவிட்டு கிறிஸ்துவைப் பின்பற்ற உறுதியான முடிவு எடுக்கிற உள்ளான விசுவாசத்தின் வெளியரங்கமான அடையாளமாக விளங்குவதே ஞானஸ்நானத்தின் முக்கியமான அம்சம்

ஆகவே, ஞானஸ்நானம், கிறிஸ்தவ வாழ்க்கை யில் முக்கிய அம்சமாக விளங்கு கிறது. ஒருவர் பெரியவராய் இருக்கும்போதோ அல்லது குழந்தையாக இருக்கும்போதோ ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டால், இயேசு கிறிஸ்துவின் அன்பையும் போதனை களையும் காட்டும்படி வாழ செய்யும் அர்ப் பணிப்பை அடிப்படை யாக கொண்டே செய்யப்படுகிறது. அது விசுவாசத்தை தனிப் பட்ட விதத்திலும் பொது வெளியிலும் அறிக்கை யிடுகிறதாகவும், கிறிஸ்துவுக்குள் புது வாழ்வை தொடங்குவது குறித்த புனிதமான தருண மாகவும் அமைகிறது.



# உண்மையுள்ள இருதயம்




- சாமுவேல் தினகரன்

அன்பானவர்களே, இருதயத்தில் உண்மையுள்ளவர்களாக இருப்பது மிகவும் அவசியம். அப்படி, இருதயத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்க, அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஆண்டவர் உதவியதுபோல உங்களுக்கும் உதவுவார். “மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல், தேவனுடைய கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும், விசேஷமாக உங்களிடத்திலேயும், கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று, எங்கள் மனது எங்களுக்குச் சொல்லுஞ்சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது” (2 கொரிந்தியர் 1:12) என்று பவுல் கூறுகிறார். தேவனுடைய கிருபையின் உதவியால் நாம் எல்லா நடவடிக்கைகளிலும் உண்மையுடன் நடந்து கொள்ள முடியும் என்று இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது.

உண்மையை தொடர்ந்து கடைப்பிடிப்பது சவாலான ஒன்று. நாம் உண்மையுள்ளவர்களாக வாழ முயற்சிப்பதை அநேக வேளைகளில் மக்கள் கேலி செய்து, மிஞ்சின நீதிமான் அல்லது பேதை என்று முத்திரை குத்துவார்கள். உலக மக்கள் தங்கள் குறைகளை ஏற்றுக்கொள்ள தயங்கி, இப்படி செய்கிறார்கள். ஆனாலும், அப்படிப்பட்ட செயல்களை நாம் தடுக்கக்கூடாது. உண்மை என்பது, நம்மை தேவனிடத்திற்கு கிட்டிச் சேரச் செய்வதுடன், அவருடைய நாமத்திற்கு கனத்தையும் கொண்டு வரும் என்று அறிந்து உறுதியாக இருக்க வேண்டும்.

வாலிப வயதில் எந்தெந்த கடமைகளில் நாம் உண்மையாக இருக்கவேண்டும்? நன்றாக படிக்க வேண்டும்; போட்டிகளில் சிறந்து விளங்கவேண்டும்; நம் திறமைகளை முழுமையாக பயன்படுத்தவேண்டும். குடும்பத்தினரிடம் அன்பு காட்டவேண்டும்; பெற்றோருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கவேண்டும்; இயேசுவின் போதனைகளை பின்பற்றி தேவனுக்கு நல்ல பிள்ளைகளாக இருக்க வேண்டும். இந்தக் கடமைகளிலெல்லாம் நாம் உண்மையாயிருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

நாம் இதை அர்ப்பணிப்புடன் செய்யும்போது, நம் வாழ்வில் நிச்சயமாகவே வெற்றி வந்து சேரும்; ஆசீர்வாதம் கிடைக்கும். ஆண்டவர் நம்பேரில் மகிழ்ந்து, “நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய்... உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” (மத்தேயு 25:21) என்று கூறுவார்.

ஆனாலும், இந்த உலகத்தில் உண்மை



Email:
samuel@jesuscalls.org

samueldhinakaranofficial

யாயிருப்பது சவால் நிறைந்தது. பிசாசு, நம் பாதையில் இடறல்களை உண்டாக்கி, நாம் செய்யவேண்டியவற்றி லிருந்து நம் கவனத்தை திசைதிருப்புவதற்கு கூடிய மட்டும் முயற்சி செய்வான். சத்துரு, சோம்பலையும், காரியங்களை தள்ளிப்போடும் குணத்தையும் நமக்குள் விதைக்க முயற்சிப்பான். அதை எதிர்ப்பதற்கு நமக்கு தேவ பெலன் அவசியம்.

மிக நன்றாக படிக்கக்கூடிய, உயர்ந்த மதிப்பெண் களோடு, வகுப்பில் முதலிடத்தை பெறும் போட்டியில் இருக்கும் நண்பன் ஒருவனை அறிவேன். அவன் பதி னொன்றாம் வகுப்பு படித்தபோது, அவனுடைய நண்பர் கள், நினைக்கும்போது அவனிடம் பேச வேண்டும் என்பதற்காக ஒரு செல்போனை அவனுக்குக் கொடுத்த னர். அவன் வீட்டில் போன் வைக்கக்கூடாது என்று கூறியிருந்தனர். ஆனாலும் அவன் நண்பர்களிடம் இரகசியமாக செல்போனை வாங்கினான். அவர்கள் தொடர்ந்து செய்திகளையும், நகைச்சுவைகளையும், புதிர்களையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்ட னர். தேர்வு சமயத்திலும் அப்படியே செய்தனர். அவன் குறுஞ்செய்திகள் அனுப்பும் பழக்கத்திற்கு அடிமையா னான். எப்போதும் ஒருவர் மாற்றி, இன்னொருவரிடம் பேசிக்கொண்டே இருந்தான்; இறுதியில் படிப்பின் மேலி ருந்த கவனத்தை இழந்தான். அதன் காரணமாக மதிப்பெண்கள் குறைந்தன. முதல் இடத்திற்கு போட்டிப் போடும் மாணவன் என்ற தகுதியையும் இழந்தான். படிப்பின்மேலிருந்த வாஞ்சை மறைந்துபோனது. பின்பு அவன் எவ்வளவோ முயற்சித்தும், திரும்ப படிப்பின் மேல் கவனத்தைக் கொண்டுவர முடியவில்லை.

இவ்வாறே பிசாசு நம்மை, குறிப்பாக தேவனுடைய பிள்ளைகளின் கவனத்தை திருப்புகிறான். அவன் நமது கடமைகளிலிருந்து தவறும்படி, குறிப்பாக தேவ பிள்ளை களின் மனங்களில் சிலவற்றை விதைக்கிறான். மற்றவர்கள், போதுமான மதிப்பெண்கள் வாங்கி முன்னேறிச் செல்லும்வேளையில் விசுவாசிகளாகிய நாம், உலகத்திலும் தேவனுக்குரிய காரியங்களிலும் செயல்பட முடியாமல் முடங்குகிறோம். உலகப்பிரகார மான காரியங்களில் கவனம் நம் செல்லும்போது, தேவ கிருபையை, நம்முடைய உண்மையுள்ள இருதயங் களை, அர்ப்பணிப்பின் ஆவியை நாம் இழக்கிறோம். நம்முடைய கவனமும், வாஞ்சையும் மறைந்துபோகும்; அவற்றை மறுபடியும் பெறுவது கடினமாகிவிடும். நமக்கு நற்பெயரை உண்டுபண்ணும் உண்மையுள்ள இருதயத்தையே நம்மிடமிருந்து திருடுவதற்கு பிசாசு முயற்சிக்கிறான்.

உலகம் அதிகமாய் உங்களை அழுத்துவதாக உணரலாம். நீங்கள் வகுப்பில் எப்படி நடந்துகொள் கிறீர்கள்; சமுதாயத்தில் எப்படி பழகுகிறீர்கள்; சபையில் என்ன செய்கிறீர்கள்; எத்தனை மதிப்பெண்கள் வாங்கு கிறீர்கள் என்று எல்லோருடைய கண்களும் உங்க ளையே நோக்கிக்கொண்டிருக்கலாம். நாம் நம்முடைய சொந்த நாமங்களையல்ல; இயேசுவின் நாமத்தை சுமந்துசெல்வதால், உலகம் நம்மை கூர்ந்து கவனிக் கிறது. நாம் செய்யும் எல்லா காரியங்களிலும் அவரது பிரதிநிதிகளாக பார்க்கப்படுகிறோம் என்பது நம்மை அதிகமாய் நெருக்கும் விஷயமாகும்.

இதை நாம் எப்படி கையாள முடியும்? தானியேலை எடுத்துக்காட்டாக வைத்துக்கொள்ளுங்கள். அவனைச் சுற்றியிருந்த ஜனங்கள் அதிகமாய் அவனை நெருக்கி னார்கள். அவன் உயிர் பிழைக்கவே, மற்றவர்களைக் காட்டிலும் வித்தியாசமானவனாக, மேலானவனாக இருக்கவேண்டியது நேரிட்டது. தேவனை பின்பற்றிய தால் அவன் விசேஷித்தவனாக விளங்கவேண்டியது இருந்தது. அவன் ஞானத்திலும், கொடுக்கும் பதில்களி லும் எப்போது சறுக்குவான் என்று அவர்கள் காத்திருந் தார்கள். தானியேல், எப்போதும் சிறப்பாக செயல்பட வேண்டிய கட்டாயம் இருந்தது. அவன் காலையிலும் பிற்பகலிலும் இரவிலும் ஜெபித்து அவ்வாறு நடந்து கொண்டான். தன்னுடைய கடமைகளைச் செய்ய அவன் உதவி கேட்டு எப்போதும் தேவனை தேடினான். எல்லோரும் அவனையே பார்த்து, நியாயந்தீர்த்துக் கொண்டிருந்த தால் அவன் தனியே விடப் பட்டதாக உணர்ந் தான்; ஆனாலும், தேவனுடைய பெல னையே சார்ந்திருந்தான். தான் செய்த எல்லாவற்றிலும் வெற்றி பெறும்படி தேவன், தானியே லுக்கு வைராக்கியமுள்ள இருதயத்தையும், சிறந்த ஞானத்தையும் கொடுத்தார். தேவன் கொடுத்த ‘விசேஷித்த ஆவி’ அவனுக்குள் இருந்தது.

**உண்மையுள்ள இருதயமே இயேசுவிடம் நமக்கு நற்பெயரை பெற்றுத் தரும்**

ஆண்டவருக்கு முன்பாகவும், நம்மை சுற்றியிருக் கிறவர்களுக்கு முன்பாகவும் ஏற்றவிதத்தில் நடப்பதற்கு நீங்களும் இதே உண்மையின் ஆவியை பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் தேவனுடைய நாமத்திற்கு கனத்தை உண்டுபண்ணுவீர்கள்; பதிலுக்கு அவர் உங்கள் பெயரை கனப்படுத்துவார். ஆகவே, உண்மை யுள்ள இருதயத்தை உங்களுக்கு தரும்படியும், அவரது பிரசன்னம் தொடர்ந்து உங்களோடு இருக்கும்படி தேவ னிடம் கேளுங்கள். தேவன்தாமே வரும் நாட்களில் உங்களுக்கு உண்மையுள்ள இருதயத்தை அருளிச் செய்து, கனப்படுத்தி உங்களை உயர்த்துவாராக.

**தேவன்தாமே வரும் நாட்களில் உங்களுக்கு உண்மையுள்ள இருதயத்தை அருளிச்செய்து, கனப்படுத்தி உங்களை உயர்த்துவாராக.**

சிறுவர் பகுதி

# ஜிம் & ஜெமி







**கதையின் நீதி:**

நாம் உத்தமமாய் இருப்பதும், வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிப்பதும் முக்கியம். ஆனால், ஆபத்துகளை தவிர்க்க எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

மனப்பாட வசனம்:

**“சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்”** மத்தேயு 10:16

JESUS CALLS
PRAYING FOR THE WORLD

# WE'RE HIRING

**COME JOIN US FOR A HEARTWARMING MISSION**

*These are some of the job positions available at Jesus Calls.*
*We invite you to apply or refer.*

**FOR THE FULL LIST OF POSITIONS, PLEASE VISIT www.jesuscalls.org**

## PRAYER TOWERS

### REGIONAL MANAGER/ AREA MANAGER

**Age:** Above 45 yrs. **Experience:** Above 20 yrs. **Location:** Across India **kills required:** Monitor the region / Motivate Team / Develop Branch Performance / Review MIS / Aggressive / Analytical / Marketing / Fundraising / Conversant with Prayer-related activities / Decision Making / Partnership building / Interpersonal Relationship / Fluent in English & Local Language.

### MANAGER - PRAYER TOWER

**Age:** Above 40 yrs. **Experience:** Above 15 yrs. **Location:** Across India **kills required:** Spiritually strong and anointed / Prayerful / Team Management / Ability to manage all the prayer-related activities / Partnership building / Marketing / Fundraising / Interpersonal Skills / Aggressive / Decision Making /Team player / Serve with compassion and excellence / Fluent in English & Local Language.

### MANAGER – FIELD EVENTS

**Location:** Chennai **Skills required:** Event Planning & Management / Logistics / Strategic Thinking / Promotions / Team Leadership / Communication skills / Relationship Building / Creativity & Innovation / Budget Management / Fundraising.

### MANAGER – KIDS MINISTRY

**Location:** Chennai **Skills required:** Children spiritual empowerment / creating and managing events / organizing Kids camps / regular meetings in Prayer Towers / promotions / creating products for kids, Content for TV and social media programs / child care programs / Good presenter to kids / willing to travel.

### MANAGER – YOUTH MINISTRY

**Location:** Chennai **Skills required:** Ability to provide visionary leadership / passionate / youth engagement / spiritual guidance / public speaker / Capacity to develop innovative and creative approaches to youth ministry, engaging events, activities, and outreach programs / raising Youth volunteers / networking.

### MANAGER – FAMILY MINISTRY

**Location:** Chennai **Skills required:** Family ministry leadership / Ability to connect with family & individuals / Plan and coordinate family-focused events and activities, including family retreats, parenting seminars, marriage enrichment workshops, and community outreach programs / Counseling / Provide Spiritual Guidance & Support.

### PRAYER INTERCESSORS / TELEPHONIC PRAYER INTERCESSOR

**Age:** 35 yrs and above **Education:** Any degree. **Language:** English, Regional Language Location: Across India Skill required: Spiritually strong / Compassionate / Prayerful / Soulful Counseling / sound Biblical Knowledge / worship / Relationship building / Fluent in English & Local Language.

## DONOR MANAGEMENT

### HEAD – DONOR MANAGEMENT

**Location:** Chennai **Skills required:** Branding / promotions / strategic planning / Fundraising / data management & analysis / Stewardship & Donor Relations / digital marketing / networking / communication skills / Team leadership.

### SENIOR MANAGER – PARTNER ENROLLMENT & RETENTION

**Location:** Chennai **Skills required:** Strategic Planning / Ability to lead a team / Strong in Partner Service skills / Relationship building skills / Data Management & Analysis / Segmenting / Marketing / Promotions / Analytical skills / Enrolment & retention strategies / Experience with CRM system / Budgeting / resource allocation.

### EXECUTIVE – CORRESPONDENCE

**Language:** Tamil / English **Location:** Chennai **Skills required:** Biblical Knowledge / Spiritual / communication expertise / Proficiency in Written & Verbal communication / Typing Skills.

### EXECUTIVE – OUTBOUND CALL

**Language:** Tamil/Kannada/Hindi/Telugu/Malayalam/English **Location:** Chennai **Skills required:** Biblical Knowledge / Spiritual / Ability to pray / communication expertise / Proficiency in Written & Verbal communication / Typing Skills / Data entry/ Time management/ Experience in call center / usage of CRM software.

## MEDIA & SOCIAL MEDIA

### HEAD – MEDIA MARKETING AND BRANDING

**Location:** Chennai **Skills required:** Branding, Marketing, Digital Marketing, Promotions, Fundraising, Negotiations skill, Distribution Channels, TV Slot management, Industry Connect, Defining Visual elements to appeal to target audience, Audience and Media Analytics, Public Relations, Communication skill.

### SOCIAL MEDIA MANAGER

**Location:** Chennai **Skills required:** Excellent communication and interpersonal skills/ Strong creative and analytical thinking/ Proficiency in managing social media platforms (Facebook, Instagram, Twitter, YouTube, LinkedIn)/ Experience with social media advertising and reporting tools/ Ability to work in a fast-paced environment and manage multiple priorities.

### PRODUCERS

**Language:** Tamil/Hindi/Telugu/Malayalam/Kannada. **Experience:** 2+ yrs relevant experience. **Location:** Chennai **Skills required:** Production Management / Creative / Script development / Technical expertise Mastery/ Creative Ideation/ Budget Management / Post-Production familiarity / social media / Live Broadcast Leadership / Promotions Strategy.

### VIDEOGRAPHER

**Location:** Chennai, Kochi, Trivandrum, Bangalore, Hyderabad, Vijayawada, Delhi, Mumbai, Raipur, Gujarat, Punjab, Kolkata. **Skills required:** Video Production Experience / Skilled in audio recording techniques / Exposure control / lighting techniques / Focus control / colour grading / Storytelling / Editing Software Knowledge in - FCP 10.0 / Adobe CC Premiere / Adobe After Effects / Photoshop CC 2021.

### VIDEO EDITOR

**Language:** Hindi/ Malayalam/Telugu/English **Location:** Chennai **Skills required:** Experienced in visual editing on FCP 10.0, Adobe CC Premiere - Adobe After Effects - Photoshop CC 2021 / Video composition / Transition / colour correction / Visual effects / music and audio sweetening / camera operation.

### METADATA/DIGITIZATION EXECUTIVE

**Location:** Chennai **Skills required:** Fluency in English and in a local language (Tamil, Hindi, Telugu, Malayalam, Kannada) / Strength in Spiritual Content / Fast Typing Skills / File organization / Database management / Content classification / Digital Audio/Video Editing.

## PROPERTY MANAGEMENT

### MAINTENANCE MANAGER

**Location:** Secunderabad **Language:** Hindi, Tamil, English **Experience:** Min 5 Years relevant experience Skills required: Strong knowledge of electrical, plumbing, HVAC, carpentry, and general building systems / Ability to lead and supervise a maintenance team effectively / Preventive Maintenance Planning / Vendor & Contract Management / Budgeting and Cost Control / Inventory and Resource Management / Project Management.

## PRAYER ACADEMY & TRAINING

### TRAINER

**Location:** PAN India **Languages:** English / Tamil / Telugu / Hindi **Experience:** 8 to 10 years relevant experience **Skills required:** Ability to design and deliver training programs & workshops / Budgeting / Scheduling / Presentation skills / Networking / Excellent communication & interpersonal skills / System proficiency / Experience in Spiritual Training.

## HR

### EXECUTIVE – TRAINING & DEVELOPMENT

**Location:** Chennai **Experience:** 2 to 5 years relevant experience **Skills required:** Training and facilitation / Curriculum design & development / Performance Management / Assessment & Evaluation / Team Collaboration & Coordination / Spiritual leadership development / Communication and interpersonal skills / Problem-solving and adaptability.

**Send your resume and position you're applying to: careers@jesuscalls.org**

"ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்" (மத்தேயு 24:14)

# சத்தீஸ்கர் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழாக்கள்









ஒருபோதும் தேவனுடைய அன்பை ருசித்திராத மக்களின் வாழ்வில் அவரது சந்தோஷம் உண்டாகும்படி அவர்களுக்கு தேவனை அறிவிப்பதே பிரார்த்தனை திருவிழா திட்டத்தின் நோக்கமாகும். பிரார்த்தனை திருவிழாக்கள் மூலம் தேவன் தம்முடைய மகிமையை வெளிப்படுத்துகிறார். அதினிமித்தம் குடிகார கணவர்கள் மனம் மாறுகிறார்கள்; பிள்ளைகள் தேவனின் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுகிறார்கள்; கடன்கள் அற்புதவிதமாய் தீருகின்றன; வியாதிகள் மறைகின்றன; குடும்பங்களுக்கும், தனி நபருக்கும் புதுவாழ்வு கிடைக்கிறது.

வெவ்வேறு பட்டணங்களில் Dr. பால் தினகரன் குடும்பத்தினர் தேவ வார்த்தையை கொண்டு வரும்போது, இந்த ஊழியத்தை தங்கள் காணிக்கைகளினால் தாங்கி வரும் பங்காளர்களை இயேசு அழைக்கிறார் ஊழியம் நன்றியறிதலுடன் நினைவுகூருகிறது. இதுவரைக்கும் 11 கோடி மக்கள், சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட மைதானங்களுக்கு நேரில் வந்து கூட்டங்களில் பங்குபெற்றுள்ளனர். பல லட்சம்பேர் தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடக தளங்களில் நேரடி ஒளிபரப்பை பார்த்திருக்கிறார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் தேவன் Dr. பால் தினகரன் குடும்பத்தினரை வல்லமையாக பயன்படுத்தி வருகிறார். இதுபோன்று நான்கு மடங்கு ஜனங்கள் தேவனுடைய அற்புதங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள அவர்கள் உதவியுள்ளனர். இது எதிர்காலத்திலும் அவர்களுக்கு இருக்கும் பெரிய பொறுப்பை குறிக்கிறது.

அதிக எண்ணிக்கையிலான மக்களை சுவிசேஷம் சென்றடைவதற்காக தேவன் Dr. பால் தினகரன் குடும்பத்தினருக்கு வாசல்களை திறக்கும்படி தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள். 'ஒரு ஆத்துமாவும் கெட்டுப் போகக்கூடாது' என்ற தரிசனத்துடன், பிரார்த்தனை திருவிழா ஊழியம் இன்னும் பல இடங்களில், இதுவரை சந்திக்கப்படாதவர்களை சந்திக்கும் என்று உறுதியாக நம்புகிறோம்.

இந்த ஆண்டில் இரண்டு பெரிய பிரார்த்தனை திருவிழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். சத்தீஸ்கர் மாநிலம் ஜக்தல்பூரில், 2024, நவம்பர் 8, 9, 10 ஆகிய தேதிகளில், Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் கலந்துகொள்ளும், பாஸ்டர் பிரார்த்தனை திருவிழா நடைபெற உள்ளது. இப்பகுதியில் ஜனங்கள் வேலையில்லாத திண்டாட்டம், வறுமை, கல்வியறிவின்மை போன்ற சமுதாய பிரச்னைகளால் அவதிப்படுகிறார்கள்.

Dr. பால் தினகரன் குடும்பத்தினர், இந்த மாநிலத்திற்காகவும் அங்குள்ள ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்பார்கள். ஜார்க்கண்ட் மாநிலத்தில், ஜாம்ஷெட்பூரில் 2024, டிசம்பர் 6 மற்றும் 7 தேதிகளில், தேசிய வாலிபர் திருவிழாவையும் நடத்த இருக்கிறோம். வாலிபர்கள் அடிமைத்தன கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, வாழ்வில் ஒளிவீசும்படி Dr. பால் தினகரன் குடும்பத்தினர் ஜெபிப்பார்கள்.

அன்பு பங்காளர்களே, உங்களுடன் சேர்ந்து இயேசு அழைக்கிறார் ஊழியம் லட்சக்கணக்கான மக்களை தொட இருக்கிறது. ஆகவே, தினமும் சிறிது நேரம் இக்கூட்டங்கள் சிறப்பாக நடைபெற ஜெபியுங்கள். நாம் இணைந்து இந்த ஊழியத்தைச் செய்வோம். இக்கூட்டங்களுக்கு மைதானத்தை ஆயத்தப்படுத்தும் வேலை, விளம்பரம், அபிவிருத்தி பணிகள், மேடை அமைத்தல், பந்தல்கள், கூடாரங்கள் அமைத்தல், ஒலி, ஒளி அமைத்தல், ஊழியக் குழுவினரின் போக்குவரத்து, ஊழியர்கள் மற்றும் தன்னார்வ ஊழியர்களின் உணவு மற்றும் தங்கும் வசதி, கூட்டங்களை நேரடி ஒளிபரப்பு மற்றும் இணையதளம் மூலம் ஒளிபரப்பு செய்தல், கணினிகள், இணைய இணைப்பு மற்றும் தொழில் நுட்ப வேலை சார்ந்த செலவுகள் உள்பட பெரிய தேவைகள் உள்ளன. பங்காளர்களாகிய நீங்கள் ஜனங்களின் வாழ்வில் தேவனுடைய ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும்படி இக்கூட்டங்களுக்கான செலவுகளை தாங்க முன்வரும்படி கேட்டுக்கொள்கிறோம். உதார குணமுள்ள உங்கள் இருதயத்தை காண்கிற தேவன் தாமே வெளியரங்கமாக உங்களை ஆசீர்வதித்து, பலன் அளிப்பார்.

## பிரார்த்தனை திருவிழாவின் மூலம் ஆசீர்வாதம் பெற்ற ஒரு சகோதரியின் சாட்சி:




நான், ஆண்டவர் இயேசுவைப் பற்றி அறியாத குடும்பத்தில் பிறந்தேன். எனக்கு நான்கு வயதானபோது, வலதுகால் எலும்பில் காசநோய் தாக்கியது. என் பெற்றோர், என்னை பல மருத்துவர்களிடம் அழைத்துச் சென்றனர். அவர்கள் காலை அகற்றிவிடும்படி ஆலோசனை கூறினர். இந்த இக்கட்டான நேரத்தில் என் தந்தை சுவிசேஷத்தைக் கேட்டு, ஆண்டவருக்கு தன் இருதயத்தைக் கொடுத்தார். மனமுடைந்துபோனாலும், ஆண்டவராகிய இயேசு என்னை சுகப்படுத்துவார் என்று விசுவாசித்து, காலை அகற்ற அவர் ஒப்புக்கொள்ளவில்லை. வலி நிவாரணத்திற்காக நான் மருந்து சாப்பிட்டு வந்தேன். இரண்டு ஆண்டுகள் கடந்தும் சுகம் கிடைக்கவில்லை. ஊன்றுகோல்களின் உதவியோடு பள்ளிக்குச் சென்று வந்தேன். மற்றவர்களின் கேலியையும் சகித்துக்கொண்டேன். அப்போது எங்கள் பட்டணத்தில் பிரார்த்தனை திருவிழா நடத்துவதற்கு Dr. பால் தினகரன் வந்தார். எங்கள் போதகர், அக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு எங்களை கேட்டுக்கொண்டார். என் தந்தை என்னை கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார். மைதானத்திற்கு ஊன்றுகோல்களோடு சென்றேன். ஜெப வேளையில் Dr. பால் தினகரன், ஜெபித்து, "யாருக்கெல்லாம் நடக்க முடியவில்லையோ, இயேசுவின் நாமத்தில் நடந்திடுங்கள்" என்று கூறினார். திடீரென ஆண்டவர் இயேசுவின் வல்லமை என்னை தொட்டது. நான் ஊன்றுகோல்களை எறிந்துவிட்டு, சாதாரணமாக நடக்கத் தொடங்கினேன். நான் நடப்பதைப் பார்த்து என் தந்தை ஆனந்தக் கண்ணீர்விட்டார். நான் ஊன்றுகோல் இல்லாமல் பள்ளிக்குச் சென்றேன். என்னைப் பார்த்த அனைவரும் ஆச்சரியப்பட்டனர். நான் இப்போது ஒரு மருத்துவமனையில் பணிபுரிகிறேன். அன்றிலிருந்து 22 ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்த பிரச்னை திரும்ப வரவேயில்லை. நான் பூரண ஆரோக்கியத்துடன் இருக்கிறேன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கே சகல துதியும் உண்டாவதாக. - ரபினா, சிக்கிம்.



**பிரார்த்தனை திருவிழாக்களில் தேவ மகிமைக்காய் இதுபோன்று அநேக சாட்சிகள் எழும்புகின்றன. பிரார்த்தனை திருவிழா திட்டத்தை தாங்கி, ரபினாவை போன்ற மக்களுக்கு நீங்கள் ஆசீர்வாதமாக விளங்கலாம்.**

---

**இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழா ஊழியத்திற்கு என் காணிக்கை (உங்கள் தெரிவை குறிப்பிடவும்)**

- ☐ ரூ.10,000/- பத்து பேரின் வாழ்க்கையை தொடுவதற்கு உதவும்
- ☐ ரூ.1,00,000/- நூறு பேரின் வாழ்க்கையை தொடுவதற்கு உதவும்
- ☐ ரூ.5,00,000/- ஐநூறு பேரின் வாழ்க்கையை தொடுவதற்கு உதவும்
- ☐ நான் ரூ..................../- காணிக்கை கொடுக்க விரும்புகிறேன்.

**044-2345 6677 என்ற பங்காளர் சேவை எண்ணை காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை தொடர்புகொண்டு அல்லது**
www.jesuscalls.org **என்ற இணையதளத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம்.**

**பிரார்த்தனை திருவிழா ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பக்கூடிய எளிய வழிமுறைகளை இந்த இதழின் 8-ம் பக்கத்தில் காணலாம்.**

பிரார்த்தனை திருவிழா ஊழியத்தைத் தாங்கி, கோடிக்கணக்கான ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக விளங்குபடி உங்களை அர்ப்பணிப்பதால் ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

# கிறிஸ்துவின் தெய்வீக அன்பின் மேன்மை!



- சகோதரி **ஸ்டெல்லா தினகரன்**

அன்பிலேயே சிறந்ததும், மேன்மையானது மானது தேவாதி தேவனிடமிருந்து புறப்பட்டு வருகிற "தெய்வீக அன்பு" மாத்திரமே ஆகும். "தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவான் 4:8) என்று வேதமும் கூறுகிறது. அதேசமயம், அன்பு என்பது கொஞ்சமும் தன் வாழ்வில் இல்லாத எந்த மனிதனும் "அவரை அறியாதிருக்கிறான்" என்றே சொல்லலாம்! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகில் மனிதனாக வாழ்ந்த காலத்தில், அவருடைய கிரியைகளை விரும்பாமல், அவரை விரோதித்த மக்களைப் பார்த்து,

**"உங்களில் தேவ அன்பு இல்லையென்று உங்களை அறிந்திருக்கிறேன்"**

(யோவான் 5:42)

என்றார். ஆம்! அவருடைய "தெய்வீகமான நற்கிரியை"களையெல்லாம் கண்ணாரக் கண்டும் கூட, அவரை விரும்பாமலும், அவர்மேல் குற்றம் கண்டுபிடித்த சில அன்பற்றவர்கள், அவர் வாழ்ந்த நாட்களிலேயேயும் இருந்தார்கள். இன்றும்கூட அதேபோன்று அவருடைய தெய்வீகத் தன்மையையும், மேன்மையையும் அறியாத மனிதர்கள் உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், அதற்கு நேர்மாறாக, அவருடைய அன்பை அறிந்தவர்களாகவும், அதன்மூலம் ஆசீர்வாதம் பெற்றவர்களாகவும் விளங்குபவர்கள் அவரால் பாக்கியசாலிகளாகத் திகழ்கிறார்கள். இந்தவிதமான பெரிய பாக்கியத்தை பெற்றவர்களுள் நானும் ஒருவள் என்று பெருமிதத்துடன் கூறிக்கொள்கிறேன். அவருடைய அன்பை அறியும் அறிவை பெற்றவர்களின் வாழ்க்கையை எவ்வளவு அழகாக அவர் மாற்றியமைத்து ஆசீர்வதிக்கிறார் என்பதைத்தான் நாம் இன்று அறிந்துகொள்ளப்போகிறோம்.

## மனுஷரைக் கட்டி இழுக்கிற தெய்வீக அன்பு!

ஓசியா 11:4-ல், "மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன்" என்று கர்த்தர் கூறுகிறார். மத்தேயு 18:14-ன்படி, "மனுஷர் ஒருவராவது கெட்டுப்போவது பிதாவின் சித்தமல்ல" என்றும்,

**"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்"**

(1 தீமோத்தேயு 2:4)

என்றும் நாம் வேதத்தில் தெளிவாக வாசிக்கிறோம். ஆனால், மனிதனோ, தன் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டு, அவருடைய தெய்வீக அன்பிற்கு தன்னை அடிமைப்படுத்தி வாழ்வதை விரும்பாமல், சத்துருவாகிய பிசாசுக்கு அடிமைப்பட்டும், இவ்வுலகத்தின் ஆசை, இச்சைகளுக்கு தன்னை உட்படுத்தியும், "கேட்டின் புத்திரனாக", "புத்திரியாக" தங்கள் வாழ்க்கையை கெடுத்துக்கொள்கிறார்கள். வேத புத்தகத்திலே, தேவனால் முதன்முதலில் சிருஷ்டிக்கப்பட்டு, ஏதேன் தோட்டத்தில் ஆசீர்வாதமாக வாழ்ந்துகொண்டிருந்த ஆதாம், ஏவாள் தம்பதியரின் வாழ்வைப் பாருங்கள். பகல் வேளையில் தேவனோடு உலாவும் படியான தெய்வீக அன்பினால் சூழப்பட்டதொரு மேன்மையான வாழ்வை அவர்கள் பெற்றிருந்தும், கேவலம் ஒரு பழத்தின்மேல் "இச்சை" கொண்டு, பிசாசின் வார்த்தைக்கு அடிமைப்பட்டு, தேவாதி தேவனின் அன்பை புறக்கணித்த அவர்கள் வாழ்வின் முடிவைப் பாருங்கள். அவர்களுக்கென்று தேவன் அன்போடு திட்டமிட்டு வைத்திருந்த சகல பாக்கியங்களையும் அவர்கள் இழந்து, பயங்கரமானதும், வேதனை நிறைந்ததுமானதொரு வாழ்வை முடிவிலே அவர்கள் பெற்றுக்கொள்ளவும் நேர்ந்ததல்லவா? (ஆதியாகமம் 3:23).

அன்பானவர்களே! உங்கள் வாழ்விலும் இதே வண்ணமாக, ''இரட்சிப்பு'' எனும் இணையற்ற ஆசீர்வாதம் ஒன்றை உங்களுக்காக தேவன் அன்போடு ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிறார். இரட்சிப்பு என்பது பாவம், சாபம், அக்கிரமம், அநீதி போன்ற குறைவுகள் நிறைந்த வாழ்விலிருந்து, நம்மை மீட்டெடுத்து, உலகம் தரக்கூடாத சந்தோஷம், சமாதானம் போன்ற தெய்வீக ஆசீர்வாதங்களால் நிரம்பியிருக்கும்படியான மேலானதும், மகிமை நிறைந்ததுமானதொரு வாழ்வை தம் தெய்வீக அன்பின் மூலம் அருளிச் செய்வதே தேவனுடைய திருவுள சித்தமாயிருக்கிறது. இதற்கு வேதத்திலிருந்து எத்தனையோ ஆதாரங்களை எடுத்துக் கூற முடியும். எனினும், பயங்கரமானதும், லௌகீகமானதுமான பாவங்களினால் நிறைந்தவளாய் வாழ்ந்த ஒரு பெண்ணின் வாழ்வு எவ்வாறு பரிசுத்தமும், தெய்வீகமானதுமான வாழ்வாக மாறியது என்பதை, யோவான் சுவிசேஷம் 4-ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். ''மாம்ச இச்சை'' எனும் பாவத்தில் ஊறியிருந்த வாழ்வை வாழ்ந்து வந்த அந்த சமாரியப் பெண்ணின் இருள் நிறைந்த வாழ்வை, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது தெய்வீக அன்பு நிறைந்த வார்த்தைகளினால் தலைகீழாக மாற்றி, தம்மைப் பற்றி அநேகருக்குக் கூறி, அவர்கள் வாழ்வையும் நல்வழிப்படுத்தும் சுவிசேஷகியாக அவளை மாற்றிய அவருடைய தெய்வீக அன்பானது எத்தனை மேன்மையும், மகிமையும் நிறைந்தது!

> நம்முடைய வாழ்வு கர்த்தருடைய தெய்வீக அன்பினால் நிறைந்திருக்கும் பொழுது, பக்தி நிறைந்ததாக மாறும்

அதேபோன்று, அன்பே உருவாயிருந்த ஆண்டவர் இயேசுவை வெறுத்து, அவருக்கு விரோதமாக, ''கேட்டின் புத்திரனாக'' இருளில் வாழ்ந்து வந்த சவுல் என்ற மனுஷன் ஆண்டவர் இயேசுவின் தெய்வீக அன்பினால் தொடப்பட்டபொழுது, அவனுடைய இருள் நிறைந்த வாழ்வு எவ்வாறு ஒளிமயமானதாகவும், தெய்வீகமானதாகவும் தலைகீழாக மாறியது! அவன் கூறும் வார்த்தையையே நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

''**கிறிஸ்துவுடனேகூட சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்**'' (கலாத்தியர் 2:20)

ஆம், தேவனுடைய அன்பு, கிறிஸ்துவின் மூலமாக, அவர் செய்த தியாகத்தின் மூலம் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரவும், மனிதன் தேவ இராஜ்யத்தை சுதந்தரிக்கும் பாக்கியம் பெறுகிறவனாகவும், தெய்வீக அன்பினால் நிறைந்தவனாகவும், தேவனுடைய அன்பை, அதின் மேன்மையை அறியாதிருக்கிற மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிறவனாகவும் மாற வேண்டும் என்பதே தேவாதி தேவனின் திருவுள சித்தமாயிருக்கிறது (எபேசியர் 5:2; எபிரெயர் 9:14).

என்னுடைய சொந்த வாழ்வில் இந்த தெய்வீக அன்பு எவ்வண்ணமாக கிரியை செய்தது என்பதை விவரிக்கிறேன்.

நான் கிறிஸ்தவக் குடும்பத்திலேயே பிறந்திருந்தும், ''கிறிஸ்துவின் அன்பின் மேன்மையை'' அறியாதவளாய் என் வாலிப வயது வரை வெறுமையானதும், வறண்டதுமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தேன். ஆனால், தேவன் தமது மிகுந்த கிருபையினால் ஏற்ற சமயத்தில், ஆண்டவராகிய இயேசுவின் சிலுவை அன்பின் மேன்மையை அறிந்து கொள்ளும் பாக்கியத்தையும், சிலாக்கியத்தையும் எனக்கு அருளி, தொடர்ந்து அந்த தெய்வீக அன்பு எனக்குள் பாய்ந்து செல்லவும், இன்று வரை அவருக்கென்று எரிந்து பிரகாசிக்கும் நல்வாழ்வையும் எனக்கு அருளிச் செய்திருக்கிறார்.

எனக்கு அருமையானவர்களே! இதை வாசிக்கிற நீங்களும் இந்த தெய்வீக இரட்சிப்பின் அன்பின் மேன்மையை அறிந்து, கிறிஸ்துவின் அன்பினால் நிறைந்த புது வாழ்வை உங்கள் வாழ்க்கையில் பெற்றுக்கொண்டு விட்டீர்களா? என்று சோதித்துப்பாருங்கள். ஆண்டவரோடு நெருங்கி வாழ்ந்த அவருடைய சீஷர்களுள் ஒருவனாகிய யூதாஸ், இந்த அன்பின் மேன்மையை உணராமல், கேவலம், பணத்திற்கு ஆசைப்பட்டு, பாக்கியமான தெய்வீக வாழ்வை இழந்து, இன்று நரகத்தில் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறான்.

நரகமா? ஜீவனா? இதில் நீங்கள் எதை தெரிந்து கொள்ளப்போகிறீர்கள்? உங்களை பயபக்தியோடு ஆண்டவரின் பாதத்தில் அர்ப்பணித்து, கிறிஸ்துவின் அன்பின் மேன்மையை ருசித்து, தெய்வீக ஆசீர்வாதம் பெறுங்கள்.

### கிறிஸ்துவின் அன்பு பக்திவிருத்தியை உண்டாக்கும்! (1 கொரிந்தியர் 8:1)

கொலோசெயர் 3:14-ல் வாசிக்கிறபடியே, பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பை தரித்துக்கொள்ளும் மேன்மை நிறைந்த வாழ்வைப் பெற்று, பக்தி விருத்தியடையும்படி கிறிஸ்துவின் அன்பு நம்மை நாளுக்குநாள் வழிநடத்துகிறது. ''ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படி நாம் தேவனால் போதித்து வழிநடத்தப்படுகிறோம்'' என்று, 1 தெசலோனிக்கேயர்

4:9-ல் நாம் வாசிக்கிறோம்.

**“அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரை தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு”** (2 தீமோத்தேயு 2:22)

ஆம்! இவ்விதமாக நீதி நிறைந்த வாழ்வையும், மற்றும் விசுவாசம், அன்பும், சமாதானமும் நிறைந்த தெய்வீக வாழ்வையும் கர்த்தர் நமக்கு அருளிச் செய்கிறார். “யாவரோடும் கூடுமானவரை சமாதான மாயிருங்கள்” (ரோமர் 12:18) என்று வேதம் சொல்லுகிறபடி, நம்முடைய வாழ்வு கர்த்தருடைய தெய்வீக அன்பினால் நிறைந்திருக்கும்பொழுது, இந்தவிதமான தெய்வீக சமாதானத்தையும்கூட கர்த்தரே நமக்கு அருளி, நம் வாழ்வை பக்தி நிறைந்ததாக மாற்றுவார். 2 தெசலோனிக்கேயர் 3:5-ல் வேதம் கூறுகிறபடியே, நம் இருதயங்களை தேவன் தம்மைப் பற்றும் அன்புக்கும், கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவார்.

இன்று, குடும்பங்களிலே ஒருவருக்கொருவரிடையே வெறுப்பு, பிரிவினை, கசப்பு ஏற்பட்டு, அதினிமித்தம் “அன்புக்கு” கொஞ்சமும் இடமில்லாமல் வேதனை, கண்ணீர் நிறைந்த வாழ்க்கை வாழ்வதையே மக்களிடையே நாம் காண்கிறோம். பிள்ளைகளை பெற்றோர் கஷ்டப்பட்டு பற்பல தியாகங்களை செய்து வளர்க்கிறார்கள். ஆனால், அவர்களோ கிறிஸ்துவின் அன்பை சற்றும் அறியாதவர்களாக எவ்வளவாய் அதே பெற்றோரின் அன்பை அலட்சியம்பண்ணி, அவர்களை வேதனைப்படுத்துகிறார்கள். இந்த நாட்களில் நாம் வெகு சாதாரணமாக இதை குடும்பங்களிலே காண்கிறோம். மற்றும் கேள்விப்படுகிறோமல்லவா?

> கிறிஸ்துவின் அன்பு, அவர் செய்த தியாகத்தின் மூலம் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும்

இவைகள் அனைத்தும் மாறவும், குடும்பம் மற்றும் மக்களுடைய இருதயம் பக்திவிருத்தியினால் நிறைந்து, ஒருவரிலொருவர் அன்போடுகூடிய தெய்வீகம் நிறைந்த வாழ்வினால் நிரம்பியிருக்க நாம் பயபக்தியோடு கர்த்தரை தேடுவோம். இதற்கு ஆதாரமாக இருப்பதுதான் வேத வாசிப்பும், ஜெப வாழ்வுமாகும். இதற்கு நம் ஆண்டவராகிய இயேசுவே நமக்கு முன்மாதிரியாயிருக்கிறார்.

அவர் சாத்தானால் சோதிக்கப்பட்டபொழுது, வேத வசனங்களைக் கொண்டே அவனை ஜெயித்தார் என்றும், அதினிமித்தம் பிசாசானவன் அவரைவிட்டு விலகிப்போனான் என்றும் நாம் வேதத்தில் வாசிக்கிறோமல்லவா? (மத்தேயு 4:10,11). அவ்வாறே அதிகாலையிலும், இரவு முழுவதும், சாயங்கால வேளையிலும் அவர் நேரத்தை வீணாக்காமல், நமக்கு முன்மாதிரியாயிருக்கும்பொருட்டு, எவ்வாறு கர்த்தரை ஜெபத்தின் மூலம் தேடினார் என்று பார்க்கிறோமல்லவா? (மத்தேயு 14:23; மாற்கு 1:35; லூக்கா 6:12).

அவ்வாறே நீங்களும் குடும்பமாகவோ, தனியாகவோ எந்த நிலையில் வாழ்ந்தாலும், தாவீதைப்போல் அதிகாலையில் (சங்கீதம் 63:1), பயபக்தியோடு கர்த்தரைத் தேடுங்கள்! குடும்ப வாழ்வில் தேவ அன்பு வெளிப்படும்படி, நாம் குடும்பமாக இணைந்து காலைதோறும் பயபக்தியோடு கர்த்தரைத் தேடுவதில் ஜாக்கிரதையாயிருப்போமானால், அது நம்முடைய குடும்ப வாழ்வை கிறிஸ்துவுக்குள் ஐக்கியப்படுத்தும். அதுமட்டுமின்றி, உபவாச ஜெபம், ஸ்தோத்திர ஜெபம் போன்ற பல்வேறு வகையான ஜெப வாழ்க்கையின் மூலம் கர்த்தரை பயபக்தியோடு தேடுவோமானால், கர்த்தர் நம் உள்ளங்களிலேயும், இல்லங்களிலேயும் அவர் அருளும் தெய்வீக அன்பு மூலம் தெய்வீக ஐக்கியத்தையும், ஒருமனம், ஒற்றுமையையும் மற்றும் பிரிவினை, வெறுப்பு போன்ற பிசாசின் குணங்களுக்கு உட்படாத பக்தி நிறைந்த தெய்வீக அன்புடன் கூடிய வாழ்வையும் நமக்கு கட்டளையிடுவார்.

என் வாழ்விலே, நான் கர்த்தருடைய அன்பை ருசித்து, அவருக்கென்று பயபக்தியோடு வாழ்ந்த பொழுது, காரணமின்றி என் சொந்த குடும்பத்தார் அனைவராலும் வெறுத்து ஒதுக்கப்பட்டு, தனித்த சூழ்நிலையில் வாழ்ந்து வந்தேன். ஆனால் கர்த்தர், அந்த நிலையிலே எனக்குள் அவர்கள் ஒவ்வொருவர் மேலும் ஒரு தெய்வீக அன்பு பிரவாகித்து ஓடும்படி செய்தார். அதினிமித்தம் என்னை வெறுத்த அவர்களை, நேசிக்கும் தெய்வீக அன்பு என்னிலிருந்து வெளிப்பட்டது. முடிவு என்னவாயிற்று தெரியுமா? கர்த்தர் அவர்கள் ஒவ்வொருவரின் இருதயத்தையும் தலைகீழாக மாற்றினார். தேவசமாதானம் எங்கள் குடும்பங்களை ஆட்கொண்டது. அவர்கள் ஒவ்வொருவரும் தேவனுடைய அன்பை ருசிக்கும் தெய்வீக வாழ்வையும் பெற்றனர். தாழ்த்தப்பட்ட நிலையிலிருந்த என் வாழ்வு கர்த்தரால் கனத்துக்குரியதாக மாறியது. ஆம்! என்னை கசந்துகொண்டிருந்த ஒவ்வொருக்கும் முன்பாக கர்த்தர் என்னை உயர்த்தி “கனத்துக்குரிய பாத்திரமாக” மாறும்படி அருள் புரிந்தார்.

பிரியமானவர்களே, கர்த்தருடைய அன்பினாலே நீங்களும் நிறைந்து அவர் அருளும் பக்திவிருத்தி நிறைந்த வாழ்வையும், அதினால் வரும் பாக்கியத்தோடுகூடிய மகிமை நிறைந்த வாழ்வையும் இவ்வுலக வாழ்விலேயே பெற்றுக் கொள்ளத்தக்கதாக, தேவனுடைய அன்பு உங்களை நிரப்பி வழிநடத்

தும்படி, அந்த அன்பினால் நீங்களும் நிறைந்துகொள்ளுங்கள்.

**நம்மில் அன்புகூருகிறவராலே ஜெயிக்கிறோம்** (ரோமர் 8:37)

"**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்**" (1 கொரிந்தியர் 15:57)

"**நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்**" (1 யோவான் 5:4) என்று வேதம் சொல்கிறது.

"**நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி,**" (யூதா 20)

இந்த வசனத்தின்படி, கிறிஸ்து நமக்கு அருளிய "மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் நம்மை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்". ஏனெனில், "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்" (எபிரெயர் 11:6). நம் வாழ்வில், விசுவாசத்தில் உறுதிப்பட்ட வாழ்வைப் பெறும்படி நாம் செய்ய வேண்டிய காரியங்கள் யாவை?

கொலோசெயர் 2:6,7 ஆகிய வசனங்களை கவனமாக வாசித்து, அதன்படி நடப்பதில் நாம் ஜாக்கிரதையாயிருப்போமானால், அந்த ஆசீர்வாதத்தை பெறுவதும் நிச்சயமான காரியம். முதலாவது, "கிறிஸ்துவுக்குள் வேர் கொண்ட ஆழமான கிறிஸ்தவ வாழ்வை" கிருபையாய் அவர் நிச்சயம் நமக்கு அருளுவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் அசையாததும், விசுவாசத்தில் உறுதிப்பட்டதாயும் இருக்கும்படியான தெய்வீக வழிகளில் கர்த்தர் நம்மை நடத்துவார்.

"**நான் உனக்கு போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்கு காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்**"(சங்கீதம் 32:8)

இவ்விதமான "தெய்வீக அன்போடுங்கூடிய பரிசுத்த வாழ்வை" நாம் பெறும்படியாக, கர்த்தர் நம்மை தமது தெய்வீக ஆவியினால் நிரப்பி பெலப்படுத்துவார்.

அன்பானவர்களே, நம் ஆண்டவர் இயேசுவே அப்போஸ்தலர் 10:38-ல் இவ்விதமான ஆசீர்வாதத்தை பெற்றார் என்பதாக வாசிக்கிறோம். அதே போன்று அவருடைய சீஷர்களும் அவர் சமுகத்தில் ஒருமனதுடன் காத்திருந்து, அபிஷேகத்தினால் நிரம்பப் பெற்று, நற்சாட்சிகளாய் எழும்பிப் பிரகாசித்தார்கள் என்று அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

தேவ தயவால் எங்கள் குடும்பத்திலும் கர்த்தர் இந்த விதமான மேலான பாக்கிய வாழ்வை அருளி, "ஜெயம் கொடுக்கிற கிறிஸ்தவ வாழ்வை" தமது தெய்வீக அன்பின் மூலம் அருளிச் செய்திருக்கிறார். இவ்விதமாக அஸ்திபாரமாக விளங்குகிற "கிறிஸ்துவின் அன்பு" உங்களையும் நிரப்பவும், நீங்களும் கிறிஸ்துவுக்குள் வெற்றிசிறந்த தெய்வீக வாழ்வைப் பெற்று மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கும்படியும் தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் கரம்பிடித்து வழிநடத்துவாராக!







# வாழ்வாதார உதவிகளும், *புது நம்பிக்கையும்*

சீஷா நிறுவனர் Dr. பால் தினகரனின் 62-வது பிறந்தநாளை முன்னிட்டு, சமுதாயத்தின் நலனுக்காக அவர் செய்த பங்களிப்புகளை கனப்படுத்தும்வண்ணம் சீஷா குழுவினர் செப்டம்பர் மாதம் பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தனர். அவற்றுள் சிலவற்றைப் பற்றிய விவரம்:

* சென்னை, ஜே.சி.ஹவுஸ் ஜெப கோபுரத்தில், இயேசு அழைக்கிறார், செஞ்சிலுவை சங்கம் மற்றும் HDFC வங்கி இவற்றுடன் இணைந்து சீஷா ஏற்பாடு செய்த இரத்ததான முகாமை Dr. பால் தினகரன் தொடங்கி வைத்தார். 39 யூனிட் இரத்தம் சேகரிக்கப்பட்டது.
* வடசென்னை பகுதியை சேர்ந்த சாலையோர ஏழை வியாபாரிகளின் குடும்பத்தினருக்கு Dr. பால் தினகரன் குடும்பத்தினர் அத்தியவாசிய உணவு பொருள்களை வழங்கினர். ஒவ்வொரு தொகுப்பிலும் 10 கிலோ அரிசி, பருப்பு, எண்ணெய் மற்றும் 11 வகையான மளிகைப் பொருட்கள் இருந்தன.
* காருண்யா நகர், பெதஸ்தா ஜெப மையத்தில் தினமும் மதிய உணவு தேவைப்படும் 100 பேருக்கு இலவசமாக ஓராண்டு தொடர்ந்து உணவு வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.
* சென்னை வானகரத்திலும், கடலூரிலும் 62 மரக்கன்றுகள் நடப்பட்டன.
* மும்பையில் 62 ஏழைக் குடும்பத்தினருக்கு அத்தியாவசிய உணவு பொருள்கள் வழங்கப்பட்டன.
* கடலூரிலும், ராஞ்சியிலும் (ஜார்க்கண்ட்) இலவச கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. ஏறக்குறைய 200 ஏழைகளுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது.
* இந்தியா முழுவதும் 8 பணித்தளங்களில் நலிவுற்ற மற்றும் வயது முதிர்ந்த 800-க்கும் மேற்பட்டோருக்கு இலவசமாக உணவு வழங்கப்பட்டது.



## சந்தோஷமும் கௌரவமும் தரும் புத்தாடை

நலிவுற்ற சிறுபிள்ளைகளுக்கு புத்தாடை கிடைப்பதில் இருக்கும் சிரமத்தை கருத்தில்கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்துமஸ் பண்டிகை காலத்தில், சீஷா புத்தாடை வழங்கி அன்பை பகிர்ந்துகொள்கிறது. இப்புத்தாடைகள் சிறுபிள்ளைகளின் சமுதாயம், உணர்வு சார்ந்த வாஞ்சைகளை பூர்த்திசெய்து, அவர்கள் நம்பிக்கையோடு உலகத்தை எதிர்கொள்ள உதவுகிறது. இந்த ஆண்டும் அவர்களுக்கு புத்தாடை மூலம் சந்தோஷத்தை வெகுமதியாக அளிக்க ஆயத்தமாகி வருகிறோம். இந்த உன்னத பணிக்கு நீங்கள் சிறு நன்கொடை அளித்து, தேவையோடு இருக்கும் சிறுபிள்ளைகளை மகிழ்ச்சிப்படுத்தலாம்.

* தேவையுள்ள ஒரு குழந்தைக்கு ஒரு புத்தாடை வழங்க ரூ.500/-
* தேவையுள்ள 100 பேருக்கு இலவச உணவு வழங்க ரூ.2,500/- (ஒரு நாளுக்கு)
* நலிவுற்ற 2 நபர்களுக்கு திறன் பயிற்சி அளிக்க ரூ.4,000/- (ஒரு மாதத்திற்கு)

**நீங்கள் விரும்பும் எண்ணிக்கையில் புத்தாடைகள் வழங்கலாம்.**

ALL DONATIONS ARE TAX-EXEMPTED UNDER SECTION 80G

DONATE TO SEESHA

UPI ID : 9384015155@okbizaxis

UPI: G Pay, PhonePe, Paytm, UPI, Amazon pay
Wallets: OLA MONEY, freecharge, MobiKwik, JioMoney

You can also donate through www.cashfree.com/payme/seesha

044 66660000
+91 9300 600 600
www.seesha.org
info@seesha.org
* When you Donate send the Details to +91 9300 600 600

SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045



Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District. and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் (யோவான் 16:20)

சத்தீஸ்கர் மாநிலம் ஜக்தல்பூரில்

# பாஸ்டர் பிரார்த்தனை திருவிழா

இடம்: **தரம்புரா மைதானம்,**
ஜக்தல்பூர், சத்தீஸ்கர்

மேலும் விவரங்களுக்கு: 0771 4335600 / 6380752277

**2024 நவம்பர்**
**8-10** (வெள்ளி, சனி, ஞாயிறு)
மாலை 5 மணி



தேவ செய்தியளித்து பிரார்த்தனை ஏறெடுப்போர்:

**Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர்**



கோயம்புத்தூரில்

# பெதஸ்தா ஆசீர்வாத கூட்டம்

நீங்கள் அற்புதத்தைப் பெற்றுக்கொள்ளும் நாள்

இடம்:
Dr. டி.ஜி.எஸ். தினகரன் மையம்,
காருண்யா நகர்,
கோயம்புத்தூர் – 641 114.

**நவம்பர் 2024**
**2** சனிக்கிழமை
பிற்பகல் 2 மணி

தேவ செய்தி தெலுங்கு / மலையாளம் / கன்னடம் / ஹிந்தி மொழிகளில் மொழிபெயர்க்கப்படும்
கோயம்புத்தூர் – பெதஸ்தா (காருண்யா நகர்) இடையே சிறப்புப் பேருந்துகள் இயங்கும்
மேலும் விவரங்களுக்கு; 0422 - 2614580 / 94878 46601

REGISTERED NEWSPAPER RNI NO.TNTAM/2003/10418 RNP LICENSE NUMBER TN/CC(S)DN/588/22-24
WPP LICENCE NUMBER TN/PMG(CCR)/WPP 625/2022-24 DATE OF PUBLICATION 18TH OF EVERY MONTH
POSTED AT PATRIKA CHANNEL, EGMORE RMS, POSTING DATE 19TH - 25TH OF EVERY MONTH

தேசிய வாலிபர் திருவிழா

Uturn

JESUS CALLS
PRAYING FOR THE WORLD

# NATIONAL YOUTH FESTIVAL

வயது:
13 முதல்
30 வரை

## ஜாம்ஷெட்பூர்

ஆராதனை | குறுநாடகம் | மைம் | விவாதம் | கேள்வி – பதில் | தேவ செய்தி | ஜெபம்

**டிசம்பர் 6,7 2024** | காலை 9 முதல் மாலை 5 மணி வரை

சாமுவேல் தினகரன் | ஸ்டெல்லா ரமோலா | டேனியல் டேவிட்சன்



**இன்றே பதிவு செய்யுங்கள்!**

அனைத்து இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்களிலும் பதிவு செய்யலாம்

| | |
|---|---|
| பதிவுக்கான நன்கொடை: | ரூ.1,000/- (தங்கும் வசதி இல்லாமல்) |
| [CONFERENCE KIT, உணவு, சிற்றுண்டி உள்பட] | ரூ.1,200/- (தங்கும் வசதியுடன்) |

மேலும் விவரங்களுக்கு:
JESUS CALLS PRAYER TOWER - RANCHI, 1st Floor, Estate Plaza, Old Hazaribag Rd, Behind Mangal Tower, Kantatoli, Ranchi, Jharkhand 834001

6380752324 / 044-23456677 / 9791934446

QR CODE ஸ்கேன் செய்து பதிவு செய்யலாம்

BIT.LY/UNYF24